இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 373
சனி, 10 ஜனவரி, 2026 |
பக்கங்கள் 15
www.ilakku.org



விதுரன்

# அதிகாரத்தை தக்கவைக்கும் அநுர அரசாங்கத்தின் தந்திரம்

## மலையகத் தியாகிகள் வாரம்:

### வரலாற்றின் வேர்களும் உரிமைகளுக்கான எதிர்காலப் பயணமும்



மருதன் ராம்



# அமெரிக்க வான்படையிடம் தோற்றதா வெனிசுலாவின் வான்பாதுகாப்பு படை?

வேல்ஸில் இருந்து அருஸ்

# இலங்கையில் புதுப்பிக்கப்பட்ட பயங்கரவாத தடைப்பட்டியல் வெளியீடு



இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் நபர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புகளின் திருத்தப்பட்ட புதிய பட்டியலை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது. 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி 6ஆம் திகதி வெளியான இந்த வர்த்தமானியின் மூலம், இதற்கு முன்னர் 2025 மே மாதம் வெளியிடப்பட்டிருந்த தடைப்பட்டியல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறைக்கு வந்துள்ள இந்தப் புதிய பட்டியலில், தடைசெய்யப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புகளின் விபரங்கள் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து, தடைப்பட்டியலில் இடம்பெற்றுள்ள நபர்கள் மற்றும் அமைப்புகளுக்குச் சொந்தமான நிதி மற்றும் வங்கி கணக்குகள், நிதி சொத்துக்கள், பொருளாதார வளங்கள் ஆகியவற்றை உடனடியாக முடக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கு இணங்க இலங்கை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்தப் பட்டியல் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, மாற்றங்களுடன் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்தத் திருத்தப்பட்ட பட்டியலை அரசின் அதிகாரப்பூர்வ இணையதளங்கள் வாயிலாக பொதுமக்கள் பார்வையிட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 16ஆம் திகதி விடைபெறுகிறார் அமெரிக்க தூதர் ஜூலி சங்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Chung), இலங்கையில் தனது இராஜதந்திரப் பணிகளை நிறைவு செய்து புறப்படுவதை முன்னிட்டு, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்து விடைபெற்றார்.

இதன்போது, 2022 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான தனது பதவிக்காலத்தில் அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் அவர் மேற்கொண்ட

தொடர்ச்சி: பக்கம் 13

## மாகாணசபை தேர்தல்கள் தெரிவுக்குழு பொறியில்..!



இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 ஜூலை 29 ல் கைச்சாத்திடப்பட்டு 1987 நவம்பர் 14 ல் 13 வது திருத்தச்சட்டத்துடன் அறிமுகமான மாகாண சபை நடைமுறையில் 09 மாகாணசபைக்கான தேர்தல் விகிதாசார தேர்தல் நடைபெற்று வந்த நிலையில் 2017 அக்டோபர் 12ல் நல்லாட்சி அரசின் காலத்தில் உள்ளூராட்சி மாகாணசபை தேர்தல் சட்ட திருத்தத்தின் ஊடாக விகிதாசார தேர்தலுக்கு முற்றுப்புள்ளி மாகாணசபை தேர்தலுக்கு வைக்கப்பட்டு புதிய எல்லை மீள் நிர்ணயம், கலப்புமுறை தேர்தலுக்கான முன்மொழிவுகள் நாடாளுமன்றில் சட்டதிருத்தம் சமர்பித்த நிலையில் மாகாணசபை தேர்தல்கள் நடைபெற

தொடர்ச்சி: பக்கம் 13

# இந்தியா மீது 500% வரி விதிக்க அமெரிக்கா திட்டம்

சீனா மற்றும் இந்தியா உட்பட ரஷ்ய எண்ணெயை வாங்கும் நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் மசோதாவை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆதரித் துள்ளதாக கரோலினா மாநிலத்தின் குடியரசுக் கட்சி செனட்டர் லிண்ட்சே கிரஹாம் புதன்கிழமை(7) தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ரிச்சர்ட் புளூமெந்தலுடன் வரைவு செய்யப்பட்ட கிரஹாமின் ரஷ்யாவைத் தடை செய்யும் சட்டம், ரஷ்யாவின் எரிசக்தித் துறையுடன் வணிகம் செய்யும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு 500 சதவீதம் வரை வரி விதிக்க டிரம்பிற்கு அதிகாரம் அளிக்கும்.


“இந்த மசோதா புடினின் போர் இயந்திரத்திற்கு எரிபொருளாகி, மலிவான ரஷ்ய எண்ணெயை வாங்கும் நாடுகளைத் தண்டிக்க ஜனாதிபதி டிரம்ப்பை அனுமதிக்கும்” சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளுக்கு எதிராக ஜனாதிபதி டிரம்பிற்கு மிகப்பெரிய செல்வாக்கை வழங்கும், என்று கிரஹாம் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய எரிசக்தித் துறையின் மீது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய தடைகள் விதிக்கப் பட்ட போதிலும், சீனாவும் இந்தியாவும் ரஷ்யாவின் எண்ணெயை வாங்குகின்றன. எரிசக்தி மற்றும் சுத்தமான காற்று ஆராய்ச்சி மையத்தின் பகுப்பாய்வின்படி, நவம்பர் மாதத்தில் சீனா ரஷ்யாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட பாதியை

தொடர்ச்சி: பக்கம் 12



## ரஸ்ய எண்ணெய்க் கப்பலை கைப்பற்றியது அமெரிக்கா



அமெரிக்க இராணுவம் ரஷ்யா கொடியுடன் பயணித்த எண்ணெய் டேங்கர் கப்பலான மரினேராவை வடக்கு அட்லாண்டிக்கில் கரீபியன் கடலில் பின்தொடர்ந்து சென்று புதன்கிழமை(7) கைப்பற்றியது.

முன்னர் பெல்லா 1 என்று பெயரிடப்பட்ட அந்தக் கப்பல், ஸ்காட்லாந்தின் வடமேற்கில் உள்ள சர்வதேச நீரில் “அமெரிக்கத் தடைகளை மீறியதாக” கூறப்பட்டதற்காக தடுத்து நிறுத்தப்பட்டது. அமெரிக்க கூட்டாட்சி நீதிமன்றம் பிறப்பித்த வாரண்டின்படி, அந்தக் கப்பல் வடக்கு அட்லாண்டிக்கில் கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கை அமெரிக்க நீதித்துறை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையால் இராணுவத்துடன் ஒருங்கிணைந்து எடுக்கப்பட்டதாக அமெரிக்க ஐரோப்பிய கட்டளை அறிவித்துள்ளது.

வெனிசுலா கடற்கரையில் அமெரிக்கா கைப்பற்ற முயன்ற நிழல்-கப்பல் டேங்கரைப் பாதுகாக்க ரஷ்யா ஒரு நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் பல போர்க்கப்பல்களை அனுப்பியிருந்தது. எனினும் அவை கப்பலை அண்மிக்க முன்னர் அமெரிக்கா நடைவடிக்கை எடுத்துள்ளது. வெனிசுலா மீதான அமெரிக்க முற்றுகையைத் தவிர்ப்பதற்காக பெல்லா 1 டேங்கர் இரண்டு வாரங்களுக்கும் மேலாக முயற்சித்தது. டிசம்பரில், அந்தக் கப்பலின் குழுவினர், அமெரிக்க படையினர் கப்பலில் ஏற முயன்றதை முறியடித்து, அட்லாண்டிக் பெருங்கடலுக்குள் சென்றனர். பல நாடுகளைச் சேர்ந்த ஏழு நேட்டோ விமானங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன.

அமெரிக்காவால் கைப்பற்றப்பட்ட எண்ணெய் டேங்கர் கப்பலான மரைனேராவின்

தொடர்ச்சி: பக்கம் 13

## செச்சென் தலைவரை கடத்த செலன்ஸ்கி அமெரிக்காவுக்கு பரிந்துரை



ரஷ்யாவின் செச்சென் குடியரசின் தலைவர் ரம்ஜான் கதிரோவை கடத்துமாறு உக்ரைன் தலைவர் விளாடிமிர் ஜெலென்ஸ்கி கடந்த புதன் கிழமை (7) அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த நடவடிக்கை ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பும். “முழு உலகமும் முடிவைக் காண முடியும். அவர்கள் அதை விரைவாகச் செய்தார்கள். சரி, அவர்கள் கதிரோவுக்கு எதிராக ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளட்டும்... ஒருவேளை புடின் இதைப்

தொடர்ச்சி: பக்கம் 13

## அனைத்துலக அமைப்புக்களிலிருந்து வெளியேறிய அமெரிக்கா

ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என மொத்தமாக 66 அமைப்புக்களில் இருந்து தாம் வெளியேறுவதாக அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலகம் கடந்த புதன்கிழமை(7) தெரிவித்துள்ளது.

நிர்வாக ஆணை 14199 இன் முன்னேற்றமாக, டிரம்ப் நிர்வாகத்தின் வீணான, பயனற்ற மற்றும் தீங்கு விளைவிக்கும் சர்வதேச அமைப்புகளை மதிப்பாய்வு செய்வதன் ஒரு பகுதியாக அடையாளம் காணப்பட்ட 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து அமெரிக்கா விலகுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்

தொடர்ச்சி: பக்கம் 13

## ஆசிரியர் தலையங்கம் | சனி, 10 ஜனவரி, 2026

# பல்தள நிறுவனங்கள் ஆற்றலுடன் செயற்படல் அரச இறைமைக்குத் தேவை குடிசார் அமைப்புக்கள் ஆற்றலுடன் செயற்படல் மக்கள் இறைமைக்குத் தேவை

“இன்று நாங்கள் உலகின் வல்லாண்மைச் சக்திகள் உலகைப் பிளவுபடுத்துவதில் நடைமுறை விருப்ப வேட்கையுள்ளவர்களாக உள்ள உலகில் வாழ்கின்றோம். (We are living in a world of great powers with a real temptation). இதனால் பல்தள நிறுவனங்கள் செயற்படுவது குறைந்த அளவில் குறைவான ஆற்றல் உள்ளனவாகச் செயற்படுகின்றன. (Multilateral institutionas are functioning less and less effectively).” இவ்வாறு பிரான்சின் அரசுத்தலைவர் மக்கரோன், பிரான்சின் வெளிநாட்டுத்தூதுவர்களாகச் செயற்படுபவர்களுக்கு மத்தியில் அரச ‘எல்இசி’ அரண்மனையில் வருடாந்த உரையினை நிகழ்த்தும் பொழுது தெரிவித்துள்ளார். இவ்வுரையில் ‘டொனால்ட் ட்ரம்ப் கீழுள்ள அமெரிக்கா அனைத்துலக சட்டங்களில் இருந்து தன்னை விடுவிப்பதுடன் படிப்படியாக தன்னுடைய சில கூட்டணிகளில் இருந்து விலகியும் வருகிறது என்று மக்ரோன் எச்சரித்தும் உள்ளார். பிரான்சிய அரசத்தலைவரின் எதார்த்தமான இந்த உரை ஒன்றுக்கு மேற்பட்ட பல அரசுக்கள் இணைந்து பல்தள நிறுவனங்களை நிறுவியும் இருப்பவற்றை ஆற்றலுடன் செயற்பட வைத்தும் அனைத்துலக சட்டங்களின் அடிப்படையிலான புதிய உலக அரசியல் ஒழுங்கை மீள்நிறுவி ட்ரம்பின் அமெரிக்க முனைவாக்க உலக அரசியல் முறைமையை எல்லைப்படுத்தி நாடுகளின் அரசஇறைமையைப் பாதுகாத்தலுக்கு பல்தள நிறுவன ஆற்றலுள்ள செயற்பாடு முக்கியமானது என்ற உண்மையை உணர்த்துகின்றது.

ஆனால் பல்தள நிறுவனங்களை உருவாக்கல் நாடுகளை ஆட்சிப்படுத்தும் ஆட்சியாளர்களால் உருவாக்கப்படும் பேணப்படும் முன்னேற்றப்படும் அமைப்பு முறைமை என்பதால் ஈழத்தமிழர்கள் போன்ற உலகின் மூத்தகுடிகளாக உள்ள தேச இனங்கள் சில தங்கள் தாயகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வந்தாலும் காலனித்துவ கால ஆட்சியாளர்கள் ஏற்படுத்திய ஆட்சிமுறைமைகளால் தங்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் காலனித்துவ ஆட்சியாளர்கள் அந்த நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கும் பொழுது தங்களது விருப்பப்படி ஏற்படுத்திய புதிய ஆட்சி முறைகளில் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளும் அடிப்படை மனித உரிமையைப் பயன்படுத்த இயலாது இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு என்பவற்றுக்கு ஆளாகி வருவது இன்றைய உலகின் கவனத்தில் எடுக்கப்படாத பிரச்சினையாகத் தொடர்கிறது.

இந்நிலையில் இத்தகைய மக்கள் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் அடிப்படையில் தங்களுக்கு எதிரான இனஅழிப்பு அரசியலுக்கு மத்தியிலும் தங்களுக்கான வாழ்வைத் தங்களால் தோற்றுவிக்கப்படக்கூடிய குடிசார் அமைப்புக்கள் வழியாகவே நடைமுறையில் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

2026இல் ஈழத்தமிழர்கள் பிரித்தானியா தாங்கள் உருவாக்கிய சிலோன் என்னும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் ஈழத்தமிழர்களிடம் இருந்து தாங்கள் காலனித்துவ போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சி வழி கையகப்படுத்திய யாழ்ப்பாண அரசின் இறைமையையும் தாங்கள் நேரடியாகவே கைப்பற்றிய வன்னியரசின் இறைமையையும் இணைத்து சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) வது பிரிவின் படி தொடர்ந்தும் மதங்களுக்கு இனங்களுக்கு எதிரான சட்டங்கள் சிலோன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் பிரித்தானிய பிரிவிக்கவுன்சிலில் நீதி பெறலாமெனக் கட்டமைத்த அரசியலமைப்பு விதியின் படி பிரித்தானிய முடிக்குரிய தலைமையே ஈழத்தமிழர்களின் மீயுயர் இறைமையாளராக தொடரக்கூடிய முறையில் 04.02. 1948 இல் சுதந்திரம் வழங்கிய 78 வது ஆண்டினை 04.02.2026 இல் எதிர்கொள்கின்றனர். இந்நாளில் ஈழத்தமிழர்களின் குடிசார் அமைப்புக்களை ஈழத்தமிழர்களின் அரசியல் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் ஒருங்கிணைத்து உலகின் மக்களுக்கு தாங்கள் இந்த 78 ஆண்டுகளும் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக ஈழத்தமிழர் தேசியப்பிரச்சனை தொடர்வதால் அதனை அனைத்துலக மக்களும் நாடுகளும் அமைப்புக்களும் கவனத்தில் எடுத்து தங்களுக்கான பாதுகாப்பான அமைதியும் வளர்ச்சிகளும் மீளுறுதி பெற உதவ வேண்டுமெனத் தேச ஒருமைப்பாட்டுடன் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் அனைத்துலகிலும் அந்நாடுகளின் குடிகளாகப் புலம்பதிந்து ஈழத்தமிழ்த்தேசியத்தவர்களாக (Nationality) உள்ளவர்கள் ஈழத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழுக்களாக அனைத்துலகிலும் பலமாகக் குரல் எழுப்ப வேண்டுமென ‘இலக்கு கோரி’ அதற்கான முன்ஆயத்தங்களை அடுத்த இருவாரங்களிலும் செய்வது ஈழத்தமிழர்களின் தாயகக் கடமையாகவும் வரலாற்றுக்கடமையாகவும் உள்ளதென்பதை வலியுறுத்துகிறது.

அவ்வாறே எதிர்வரும் மே மாதம் 14ம் திகதியன்று ஈழத்தமிழர்கள் தங்களது பிரிக்க இயலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் தரும் தனியரசினை மீள்அமைக்கப் போகவதாக உலகிற்கும் 22.05. 1972 முதல் தங்களை ஆளும் அரசியலமைப்பு தகுதியினை இழந்து விட்ட சிறிலங்கா பௌத்த சிங்களக் குடியரசுக்கும் வட்டுக்கோட்டையில் ஈழத்தமிழர்களின் தலைமை அரசியல் கட்சியாக விளங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பிரகடனப்படுத்திய 50வது – பொன்விழா ஆண்டு ஆதலால் பெப்ரவரி 4 முதல் 14.05. 2026 வரை இந்த ஈழத்தமிழர் வரலாற்றை அனைத்து மக்களுக்கும் தாயகத்திலும் உலகிலும் தெரிவிப்பதற்கான செயற்திட்டங்களை உருவாக்க வேண்டுமென இலக்கு பணிவன்பாக வேண்டுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் “ தமிழர்களுக்கான அரசியல் ரீதியான நிரந்தரத் தீர்வு வழங்கப்படும். கடந்த காலங்களில் பல அரசுக்களும் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்தன ஆயினும் நடைமுறைப்படுத்தவில்லை. அந்தத் தவறுகளை மீண்டும் செய்யாமல் உண்மையான மற்றும் நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதற்குத் தற்போதைய அரசு பொறுப்புடன் செயற்படும். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், சமத்துவம், பாதுகாப்பு, மற்றும் அதிகாரப்பகிர்வு போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும். அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய ஒற்றுமையான நாட்டைக் கட்டியெழுப்புவதே இந்த அரசின் நோக்கமாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நாட்டின் உள்நாட்டு விடயமாக இருப்பினும் அனைத்துலக சமுகத்திடம் சிறிலங்கா அரசு வெளிப்படையாகவும், பொறுப்புடனும் செயற்படுவதாக நம்பிக்கை அளிக்க வேண்டிய தேவையும் உள்ளது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது நம்பிக்கையை மீட்டெடுப்பதே இந்த அரசின் முதன்மையான இலக்கு. அதற்காக அரசியல் ரீதியான நிரந்தரத் தீர்வு வழங்கப்படுமென்று உறுதியளிக்கின்றோம். வாக்குறுதி மட்டுமல்ல அதை நடைமுறையில் நிறைவேற்றும் அரசாக இந்த அரசு செயற்படும்” என தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் தமிழக – மேற்குலக நாடுகளின் வருகையின் காலத்தினதும் தேவையினதும் முக்கியத்துவத்தை சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அவர்களின் இந்தப் பேச்சு உறுதிப்படுத்தியுள்ளது. கட்சி அரசியலைக் கடந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஈழத்தமிழர்களின் தேச ஒருமைப்பாட்டிற்கும் மக்கள் இறைமை உறுதிப்பாட்டுக்கும் புதிய உற்சாகத்தை ஈழத்தமிழர்களுக்கு மத்தியில் அளிக்கும் வகையில் செயற்படத் தொடங்கியுள்ளமையும் தமிழக மக்களின் இனத்துவ ஒருமைப்பாட்டை வளர்க்க முயற்சித்து வருவதும் 2026ம் ஆண்டுக்குப் புதிய நம்பிக்கை தருவதாக உள்ளது. இதனை மேலும் வளர்க்க சந்தேகங்கள் கேள்விகளை நேரடியாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடனான உரையாடல்கள் வழி அனைத்து ஈழத்தமிழர்களும் செயற்பட வேண்டிய காலமாக 2026 அமைகிறது.

ஈழத்தமிழர்களுக்கான நியாயமானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வு என்பது ஈழத்தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை இலங்கைத் தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். பிரித்தானிய காலனித்துவ காலத்தின் பின்னர் இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்களின் இருப்பைச் சிங்களவர்கள் இலங்கையின் யாழ்ப்பாண அரசின் வன்னியரசின் நிலப்பரப்புக்களாக அறிவித்து இலங்கைத் தீவுக்குச் சிங்களவர்கள் பிரிவினை கோரிய பின்னணியில் 1978 முதல் 2009 வரை ஈழத்தமிழர்கள் தங்களின் யாழ்ப்பாண வன்னியரசின் நிலப்பரப்புக்களில் தங்களுக்கான நடைமுறையரசை மீள் உறுதி செய்து நடைமுறையரசை உலகிற்கு 31 ஆண்டுகள் வெளிப்படுத்தியமை வரலாறு. இந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியை நியாயமான நிரந்தரத் தீர்வை வெளிப்படுத்த வைக்க வேண்டிய ஆண்டாக 2026 அமைகின்றது என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. இதற்கான செயற்பாடுகளும் ஈழத்தமிழர்களின் பொருளாதார சமுக வாழ்வின் நலன்களுக்கான செயற்பாடுகளும் இவ்வாண்டில் ஈழத்தமிழர்களின் குடிசார் அமைப்புக்களின் இணைப்புக்களுடன் முன்னெடுக்கப்பட்டு குடிசார் அமைப்புக்களின் ஆற்றல் உள்ள செயற்பாடு மக்கள் இறைமைக்குத் தலையானது என்பதை உணர்த்த அனைவரும் உழைக்குமாண்டாக இவ்வாண்டை அமைத்துக் கொள்வோம்.

**ஆசிரியர்**

# மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் கடற்படை வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்: ஜனாதிபதி



மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிப்பதற்கு கடற்படை இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார். நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அண்மையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிக்குளம் மக்களின் அவல நிலை குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றார். 2007ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த முள்ளிக்குளம் மக்கள், இதுவரை மீளக்குடியேற்றப்படாமல் காயக்குழி மற்றும் மலைக்காடு கிராமங்களில் கடும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

முள்ளிக்குளம் மக்களின் பூர்வீக வீடுகளில் தற்போது கடற்படையினரின் குடும்பங்கள் தங்கியுள்ளனர். மக்களின் குடியிருப்பு நிலங்கள், விவசாயக் காணிகள், குளங்கள் மற்றும் மீன்பிடி இறங்குதுறைகள் என அனைத்தும் கடற்படையின் ஆக்கிரமிப்பில் உள்ளன.

இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டிய ரவிகரன் முள்ளிக்குளம் மக்களை உடனடியாக அவர்களது சொந்த மண்ணில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையைத் தொடர்ந்து, அக்கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்படை உயர் அதிகாரி, முள்ளிக்குளத்தில் உள்ள ஒரு தொகுதி நிலம் பொதுமக்களுக்குச் சொந்தமானது என்பதை ஏற்றுக்கொண்டதுடன் அந்தக் காணிகளை விடுவிக்கக்கூடிய சாதகமான நிலை இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எதிர்வரும் 15ஆம் திகதி தாம், மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அதன்போது முள்ளிக்குளம் காணி விடுவிப்பு மற்றும் மக்கள் மீள்குடியேற்றம் குறித்து விரிவாகக் கலந்துரையாடி இறுதி முடிவு அறிவிக்கப்படும்”எனவும் உறுதியளித்தார்.

# அதிகாரத்தை தக்கவைக்கும் அநுர அரசாங்கத்தின் தந்திரம்


## “வெனிசுலா விடயத்தில் கட்சி ரீதியான அமெரிக்க எதிர்ப்பும் அரசாங்க ரீதியான அரவணைப்பும் வெளியுறவுக்கொள்கையை வேடிக்கையாக்கியுள்ளது”




விதுரன்

வெனிசுலாவில் அமெரிக்கா மேற்கொண்ட அதிரடி இராணுவத்தலையீடும்,அந்தநாட்டின்ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கடத்தப்பட்டு அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டதும் உலக அரசியல் அரங்கில் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் ஒரு நாட்டின் இறையாண்மை என்பது நவீன சர்வதேச ஒழுங்கில் எந்தளவுக்குப் பலவீன மாகியுள்ளது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. வெனிசுலா ஜனாதிபதியை அவரது நாட்டிற்குள்ளேயே வைத்துச் சிறைப்பிடித்தஅமெரிக்காவின் செயல், சர்வதேச சட்டங்களின் அடிப்படை அத்திவாரத்தையே அசைத்துப் பார்த்துள்ளது.



இதுவெறும் நிக்கோலஸ் மதுரோ என்ற தனிநபருக்கு எதிரான நடவடிக்கை மட்டுமல்ல மாறாக, லத்தீன் அமெரிக்காவில்மீண்டெழும் இடதுசாரி செல் வாக்கை ஒடுக்குவதற்கும், அந்த நாட்டின் பரந்துபட்ட எண்ணெய் வளங்களை டொலர்கள்மூலமான வர்த்தகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு மான மூலோபாய நகர்வாகும்.

இந்த முன்னுதாரணமானது கியூபா, ஈரான் போன்ற நாடுகளுக்கும், ஏன் அமெரிக்காவுடன் முரண்படும் எந்தவொரு நாட்டுக்கும்நாளை நிகழலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் இந்த பாணியை ரஷ்யாவோ அல்லது சீனாவோ தனதுஅண்டை நாடுகளுக்கு எதிராகப் பின்பற்றத் தொடங்கினால், அது உலகளாவிய அராஜகத்திற்கு வழிவகுக்கும் என்பதில்மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

நவீன யுகத்தில் ஒரு நாட்டின் தலைவரைக் கைப்பற்றி அல்லது அழித்து அதிகாரத்தை நிலைநிறுத்தும் இத்தகைய போக்கு,ஜனநாயக விழுமியங்களுக்கு விடப்பட்ட நேரடிச் சவாலாகும். இது சீனாவின் பொருளாதாரப் பாய்ச் சலைத் தடுப்பதற்கும், அமெரிக்க மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்குமான ஒரு நீண்டகால பூகோள அரசியல் மூலோபாயத் திட்டத்தின் ஒருபகுதியாகும்.

இவ்வாறான பின்னணியில், இலங்கையைப் பொறுத்தவரை, ஜே.வி.பி. தலைமையிலான ஆட்சி உரு வானபோது, அதுஅமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடு களுக்குச் சவாலாக அமையும் என்றே பரவலாக எதிர்பார்க் கப்பட்டது.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு அநுர அரசாங்கம் அமெரிக்கா மற்றும் இந்தியாவுடன் மிக இணக்கமான உறவைப் பேணத்தொடங்கியது. இது பல இடதுசாரி ஆதரவாளர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், வெனிசுலா விவகாரம்அந்த சந்தேகங்களுக்கு தெளிவான விடையைக் கொடுத்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு பிரதிபலிப்பது என்பது தொடர்பில்தடுமாறி நீண்ட மௌனம் காத்தபோது, அந்த மௌனத்தை முதலில் உடைத்தது ஜே.வி.பி. தான்.

ஜே.வி.பியின் நிறைவேற்றுக் குழு அறிக்கை யொன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையில், அமெரிக் காவை மிகக்கடுமையாகச் சாடியிருந்தது. அமெரிக்காவின் நடவடிக்கையை 'இறையாண்மை மீதான ஆக்கிரமிப்பு' என்று வர்ணித்தஅக்கட்சி, நவீன சமூகமும் ஆட்சியும் நாகரீகமாக இருக்க வேண்டும் என்று அமெரிக்காவுக்கு வகுப்பெடுத்திருந்தது.



ஒரு நாட்டின் இறையாண்மையை மீற எந்த வல்ல ரசுக்கும் உரிமை இல்லை என்றும், வெனிசுலா மக்களுடன் தாங்கள்உறுதியாக நிற்பதாகவும் ஜே.வி.பி. பகிரங்கமாகவே அறிவித்தது. இந்த அறிவிப்புக்களின் போது அக்கட்சி அமெரிக்கா பற்றிகிஞ்சித்தும் சிந்தித்துப்பார்க்கவில்லை.

இருப்பினும், இதேகட்சியின் பிரசார செயலா ளராகவும், இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகவும் இருக்கும் விஜிதஹேரத்தின் வெளிப்பாடு முற்றிலும் மாறு பட்டதாக இருந்தது.

அவரது வெளிப்பாடு அதிகமாக ஜனநாயகத்தை மையப்படுத்திய சொல்லாடல்களையும்,சர்வதேச சட்டங்கள், ஐ.நா.உடன்பாடுகள் உள்ளிட்டவற்றை மையப்படுத்தியதாக வும் இருந்தது.

உள்நாட்டில் நிகழ்ந்தேறிய மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச உடன்பாடுகளையோ, சட்டங்களையே கவனத்தில் கொள் ளாத தரப்பொன்று வெனிசுலா விடயத்தை குறைந்த பட்ச மேனும் கவனத்தில்கொண்டிருப்பது ஆச்சரிய மூட்டுவதாக இருக்கிறது.



அதுவொருபுறமிருக்கையில், ஜே.வி.பியின் வெளி ப்பாடுக்கும், அதேகட்சியின் முக்கியஸ்தராகவும் நாட்டின் வெளிவிவகாரஅமைச்சராகவும் இருக்கும் விஜித ஹேரத் தின் வெளிப்பாட்டுக்கும் இடையில் வேறுபாடுகள் தாரள மாகவே இருந்தன.

அந்த வேறுபாடுகளை 'அரசியல் கட்சியின் நிலைப்பாடு வேறு, அரசாங்கத்தின் நிலைப்பாடு வேறு' என்று விஜித ஹேரத்அர்த்தம்கற்பித்து வழங்கிய விளக்கம், இராஜதந்திர ரீதியாகத் தற்காத்துக் கொள்ளும் முயற்சியா கும்.

அதுமட்டுமன்றி, ஜே.வி.பியின் மத்தியகுழு, தலை மைக்குழு, முக்கிய தீர்மானங்களை எடுக்கும் 'டீம் 6' ஆகிய வற்றில் அங்கம்வகிக்கும் விஜித ஹேரத் கட்சி ரீதியாக ஒரு நிலைப்பாட்டையும், அரசாங்க ரீதியாக பிறிதொரு நிலைப்பாட்டையும் எவ்வாறுவெளிப்படுத்த முடியும். அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

தேசிய மக்கள் சக்தி என்ற போர்வைக்குள் இருந்து கொண்டிருப்பதால் இவ்வாறான இரட்டை முகங்களை இலகுவாககாண்பிக்க முடியும். அவ்வாறு தான் கடந்த காலங்களில் முக்கிய தருணங்களில் அநுர அரசாங்கம் நடந்துகொண்டது. ஆனால் வெனிசுலா விடயத்தில் அந்த மூலோபாயம் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தி விட்டது

அதேவேளை,வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட உத்தியோக பூர்வமான அறிக்கையில் 'அமெரிக்கா' என்ற பெயரோஅல்லது 'மதுரோ' என்ற பெயரோ இடம்பெற வில்லை என்பது மிகவும் அவதானிக்கவொரு விடயமாகும். இந்த விடயம் அரசாங்கம் அமெரிக்காவைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது.

அநுர அரசாங்கத்தின் அந்தத் தயக்கத்திற்குப்

தொடர்ச்சி: பக்கம் 12

# மீள் கட்டுமான பணிகள் வடக்கு, கிழக்கு, மலையகத்துக்கு பூரணமாக சென்றடைந்ததா?

—— பா.அரியநேத்திரன்



கடந்த 2025 நவம்பர் இறுதியில் வீசிய டித்வா புயல், மற்றும், மழை வெள்ளம் மண்சரிவால் நாடு முழுவதும் 2.2 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 627க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் 6,164 வீடுகள் முழுமையாகவும் 112,110 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதுடன் மக்கள் பாதிக்கப்பட்டு, பெரும் வெள்ளம், நிலச்சரிவுகள், வீடுகளுக்கு சேதம், மற்றும் மின் தடைகள் போன்றவற்றை ஏற்படுத்தியது. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல்வேறு நாடுகள் உதவிக்கரம் நீட்டின, இந்தியா மீட்புப் பணிகளுக்கும், மறுசீரமைப்புக்கும் நிதி உதவி அளித்தது. பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணம், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புதல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.



மத்திய மலைநாட்டைப் பாதுகாப்பதற்கான நிரந்தரத் தீர்வின் கீழ், தாக்கம் ஏற்படக்கூடிய வலயங்களில் உள்ள 15,000 வீடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், 2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மக்களுக்காக 8,000 வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் மண்சரிவு அபாயத்தைக் குறைப்பதற்காக வடிகாலமைப்புப் பொறிமுறைகளை நிறுவுதல் மற்றும் மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் உள்ளிட்ட தரப்பினர்களுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.



பாதிக்கப்பட்ட சுமார் 14 இலட்சம் மக்களில் 2 இலட்சத்து 75 ஆயிரம் குழந்தைகள் அடங்குகின்றனர். நிலச்சரிவு வெள்ளம். காரணமாக நாடு முழுவதும் சுமார் 1200 இடங்களில் நிலச்சரிவுகள், கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

வீடுகள் பயிர்கள் சேதம்: ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன அல்லது அழிந்தன, விவசாயப் பயிர்களுக்கும் பெரும் சேதம் நாடுமுழுவதும் ஏற்பட்டது. கொழும்பு, கண்டி, நுவரெலியா, பதுளை, கேகாலை உள்பட வடக்கு கிழக்கு அடங்கலாக 17 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த பாதிப்புக்களுக்காக பல நாடுகள் இலங்கை க்கு உதவிகளை வழங்கியது.

மீட்பு மற்றும் நிவாரண உதவிகள், சர்வதேச உதவிகள், ஐக்கிய நாடுகள் சபை, சீனா உள்ளிட்ட நாடுகளின் நிதி மற்றும் உதவிகள் இலங்கைக்கு கிடைத்தன.

இந்தியா மீட்புப் பணிகளுக்கு உதவியதுடன், மறுசீரமைப்புக்கு ரூ. 4,050 கோடி நிதியுதவி அளித்தது.

இலங்கைக்கு 22 நாடுகள் மற்றும் உலக உணவுத் திட்டம் வழங்கிய நிவாரணப் பொருட்கள் குறித்த விரிவான புள்ளிவிபரங்களை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் காணமுடிந்தது.



13 நாடுகளிடமிருந்து 2161 தொன் உணவுப் பொருட்கள் பெறப்பட்டு, அவற்றில் 1800 தொன் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் பாகிஸ்தான் உட்பட 5 நாடுகளிடமிருந்து 26.5 தொன் மருந்து பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சீனா, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளிடமிருந்து 14,750 கூடாரங்கள் பெறப்பட்டுள்ளன. இந்தியா 75 வாகனங்களை (பெரிய லொறிகள், நீர் பவுசர்கள் மற்றும் குப்பை சேகரிக்கும் லொறிகள்) வழங்கியுள்ளது.

உதவிப் பொருட்கள் மட்டுமன்றி, மீட்புப் பணிகளுக்காக 7 நாடுகளிலிருந்து 89 நிபுணர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இதில் இந்தியாவிலிருந்து அதிகபட்சமாக 80 நிபுணர்கள் தேடுதல், மீட்பு மற்றும் மருத்துவப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு கட்டங்களில் ஏறக்குறைய 22, நாடுகள் அத்தியாவசியப் பொருட்களை வழங்கியுள்ளன. இந்தியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், இஸ்ரேல், ஓமான், ரஷ்யா, துருக்கி, சிங்கப்பூர், டென்மார்க், ஐக்கிய இராச்சியம், சுவிட்சர்லாந்து, மியான்மர், பங்களாதேஷ், ஜெர்மனி,நெதர்லாந்து.பிரான்ஸ்,கத்தார், மாலைத்தீவுகள் ஆகிய 22, நாடுகள் இணைந்து உலக உணவுத் திட்டமும் மனிதாபிமான உதவிகளையும் வழங்கியுள்ளது.



டித்வா புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 21,272 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்புக்களை சேர்ந்த 33,640 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.றினூஸ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்கான அழிவுகள் மற்றும் அதற்கான இழப்பீடு வழங்கப்பட்டமை தொடர்பில் கடந்த மாத இறுதியில் என்று போடலாம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 21, 272 ஹெக்டேயர் நிலப்பரப்புக்களை சேர்ந்த 33,640 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட அடிப்படையில் பார்க்கின்ற போது திருகோணமலை மாவட்டத்தில் 15,389 ஹெக்டேயர் பரப்பளவை கொண்ட 23516 விவசாயிகளும், மட்டக்களப்பில் 2961 ஹெக்டேயரை சேர்ந்த 5009 விவசாயிகளும், அம்பாறையில் 2922 ஹெக்டேயரை சேர்ந்த 5115 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



'டித்வா' புயலினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் 50 இலட்சம் ரூபா கொடுப்பனவை, ஜனவரி மாதத்தின் முதல் 10 நாட்களுக்குள் வழங்க ஆரம்பிக்கவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். எனவே இப்போதுதான் ஜனவரிமாதம் தொடங்கி 10 நாட்கள் முடிவடைகிறது. இது முன்னெடுக்கப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அனர்த்தம் இடம்பெற்று சேதமடைந்த வீதிகளில் 99 சதவீதமானவற்றை புனரமைத்துள்ளதாகவும், வீடுகளை முற்றாக இழந்தவர்கள் ஒரு வருடம் முடிவதற்குள் தமக்கான வீட்டை அமைத்துக்கொள்ள உதவுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அரச தரப்பு அமைச்சர்கள் கூறி வருகின்றனர்



எவ்வாறாயினும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் விவசாயிகளும் தமக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு இதுவரை உரிய முறையில் கிடைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த அனர்த்தத்தின்போது மலையகத்தைச்சேர்ந்த மகமன்கடவல குளம் பெருக்கெடுத்ததால் வெள்ளத்தில் மூழ்கிய தமது வீடுகளுக்கு, இதுவரை 25,000 ரூபா அடிப்படை இழப்பீடு கூட கிடைக்கவில்லை என மஹமன்கடவல கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வெள்ளம் காரணமாக அப்பகுதியில் 150க்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது பாதிக்கப்பட்ட மலையகம், மற்றும் வடகிழக்கில் உள்ள மாவட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் சென்றடைந்தாலும் இன்னும் ஏனைய கட்டுமானம், மற்றும் விவசாய அழிவுகளுகளுக்கான கொடுப்பனவுகள் பூரணமாக வழங்கப்படவில்லை. அதற்கு இன்னும் காலதாமதம் ஏற்படும் என்பதே உண்மை.

இயற்கை அனர்த்தம் தொடர்பாக வழமையாக எதிர்கட்சிகளை சேர்ந்தவர்கள் அரசை குறை கூறுவது தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டுள்ள நிலையில், துரிதமாக மீள்கட்டுமாணப்பணிகளை செய்யவேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும்.

• • •

# தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதாக கூறி அபகரிக்கப்படும் தமிழர் நிலங்கள்







**பாலநாதன் சதீசன்**

தமிழர் தாயகத்தில் 2009ம் ஆண்டு இடம்பெற்ற இனவழிப்பு போருக்கும் பின்னரான காலப்பகுதி முதல் தமிழர்களின் பூர்வீக நிலங்கள், ஆலயங்கள் தொல் பொருள் சின்னம் எனும் பெயரில் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில், வளம்கொழிக்கும் வன்னி மண்ணின் வவுனியா சமளங்குளம் பகுதியிலே கல்லுமலை விநாயகர் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இந்த பழமை வாய்ந்த ஆலயத்தில் பல வரலாற்றுச் சிறப்புக்கள் காணப் படுகின்றது. ஆனால் குறித்த ஆலயம் தொன்மை சின்னங் களை பாதுகாக்கின்றோம் எனும் பெயரில் தொல்லியல் திணைக்களத்தால் பறிபோகும் நிலையில் தற்போது இருக்கின்றது.

ஆரம்பத்தில் வவுனியா வெடுக்குநாறிமலை ஆல யத்தில் தொடங்கி செம்மலை பழைய நீராவியடி ஆலயம், குருந்தூர் மலையில் தொடர்ந்த தொல்பொருள் ஆக்கிர மிப்பு இன்று மீண்டும் வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் தொல்பொருள் ஆக்கிரமிப்புக்குள் சிக்கியிருக்கின்றது.

## ஆலய அமைவிடம்

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரில் இருந்து ஏழு கிலோமீற்றர் தொலைவில் சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் அமைவு பெற்றுள்ளது. இது நிலமட்டத்தில் இருந்து சாய்வாக உயர்ந்து செல்லும் மலையின் உயரம் கிட்டத்தட்ட இருபது அடிக்கும் குறைவானதாக காணப்படுகின்றது. குறிப்பாக ஐந்திற்கு மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் மக்கள் குலதெய்வமாக இந்த ஆலயத்தினை வழிபட்டு வருகின்றனர்.



## கண்டுபிடிக்கப்பட்ட தொன்மைச் சின்னங்கள்

கருங்கற்தூண்கள், கல்லில் செதுக்கப்பட்ட படிக்கற்கள், பலிபீடம், செங்கற்படிமங்கள், சங்கு, அம்மன் சிலை, சிவலிங்கம் போன்ற மேலும் சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பழம்குடியினர் சான்றளித்துள்ளதாக தெரியவருகின்றது. அத்தோடு குறித்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட அம்மன் சிலையினை பத்தினி தெய்வம் எனும் பெயரில் வவுனியா தொல்பொருள் சாலையில் இன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

1952ல் இருந்து வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயத்தினை சிறு கொட்டகையாக அமைத்து மக்கள் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வந்திருந்தனர். அதனைதொடர்ந்து 1978 ஆம் ஆண்டு ஆலயத்தினை மேலும் புணரமைக்கும் நோக்கோடு மக்கள் இணைந்து ஆலய பகுதியினை துப்பரவு செய்யும் போது புற்று ஒன்றினுள் இருந்து செங்கற்படிமங்களும் கருங்கற்தூண்களும் கண் டெடுக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து குறித்த தகவலை அறிந்த தொல்பொருள் திணைக்களத்தினர் குறித்த இடத்தினை ஆய்விற்குட்படுத்தியிருந்தனர். இதன்போது அம்மன்சிலை, சங்கு போன்ற சான்று பொருட்கள் கிடைத்ததாக முன்னோர்கள் சான்றுபடுத்தியிருந்தாக அறியமுடிந்தது. குறித்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அம்மன் சிலையினை பத்தினி தெய்வம் எனும் பெயரில் வவுனியா தொல்பொருள் சாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வின் பின்னர் குறித்த ஆலயத்திற்கு முன்பாகவுள்ள அழிவடைந்திருந்த பகுதியை பாதுகாக்க வேண்டும் என கூறி செங்கற்களை கொண்டு கட்டியிருந்தார்கள். அது புத்தர் கோயிலின் வடிவமைப்பினை ஒத்ததாக இருப்பதனால் அதில் சந்தேகமடைந்த மக்கள் அதற்கு தமது எதிர்ப்பை வெளிப் படுத்தி இருந்தார்கள். அதனை தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு வவுனியா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சி.சிவசிதம் பரம் மூலம் பாராளுமன்றில் குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டு குறித்த பகுதி இந்துக்களுக்கு சொந்தமான பகுதியென ஏற்றுக்கொள்ளப்படதைத் தொடர்ந்து தொல் பொருள் திணைக்களத்தின் இடையூறுகளும் தவிர்க் கப்பட்டிருந்தது.



மீண்டும் 2018 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினர் கட்டுமான பணிகளை மேற்கொள்வதற்கு முயற்சித்த வேளை மக்களுக்கும் தொல்பொருள் தினணக்களத்தினருக்கும் கருத்து வேறு பாடு தோன்றியதனை தொடர்ந்து மக்களின் கடும் எதிர்பால் கட்டுமான பணிகள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டது.

சிறிது கால இடைவெளியில் குறித்த ஆலயத்தின் நிர்வாகம் மாறியதனையடுத்து ஆலய நிர்வாகத்தினருக்கும், தொல்பொருள் திணைக்களத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின் ஆலயத்தில் திருத்த பணிகளை மேற்கொள்ள தொல்பொருள் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது. இதனையடுத்து தொல்பொருள் திணைக் களமும் குறித்த பகுதியில் சிதைந்த வடிவிலிருந்த உரு வத்தை எண்கோண வடிவில் மீள அமைத்திருந்தார்கள்.

இந்நிலையில் மீண்டும் கடந்த வருடம் இறுதியில் குறித்த பகுதியில் தொல்பொருட்களை பாதுகாப்பதாக கூறி கட்டுமான பணிகளை தொடர்ச்சியான முறையில் தொல்பொருள் திணைக்களத்தினர் மேற்கொண்டு வரு கின்றார்கள்.

இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு களவிஜயம் மேற்கொண்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் எஸ்.தவபாலன் ஊடகங் களுக்கு கூறும்போது,

வவுனியா சமளங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்திற்கு சென்றிருந்தோம், அங்கு தொல்லியல் எச்சங்களை பாதுகாக்கிறோம் என்ற போர்வையில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான அடித்தளம் இடப்பட்டுக் கொண்டிருக்கிறது.



தொல்லியல் திணைக்களம் மக்களை குழப்பி வைத்துள்ளது. எனவே நாங்கள் இது தொடர்பாக சில விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தோம். குருந்தூர் மலையிலும் ஆரம்பத்தில் இப்படியான ஒரு கட்டுமானமே முன்னெடுக்கப்பட்டது. தற்போது அங்கு விகாரை அமைக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்த விடயம்.

கல்லுமலையில் ஒரு பிள்ளையார் ஆலயம் உள்ளது அதனை திருத்துவதற்கு உதவிசெய்கிறோம். ஆலயத்தை தொடர்ந்து நீங்கள் கட்டலாம் என்ற சலுகைகளை கூறி விகாரையை கட்டும் முயற்சியே எதிர்காலத்தில் இடம்பெறும். இது தொடர்பாக மக்களுக்கும் கூறியிருந்தோம்.

ஆலய நிர்வாகம் உட்பட்ட அந்த மக்கள் குழப்பப்பட்டுள்ளனர். இது மிகுந்த கவலையை தருகின்றது. இந்த ஆபத்தினை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். குறிப்பாக சமளங்குளம் மக்களும் ஆலய நிர்வாகமும் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்று அவர்கள் சொல்லும் வாக்குறுதி உங்களை சமாளிப்பதற்கு மட்டுமே. தமிழர் பகுதியில் விகாரையாக எழுந்து நிற்கின்ற இடங்களில் எல்லாம் பல்வேறு வாக்குறுதிகள் கூறப்பட்டன. ஒரு சிலர் ஜேவிபி யின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவும் அடிப்படை நலன்களுக்காகவும் மக்களை குழப்பியுள்ளனர். இதன் மூலம் எதிர்காலத்தில் உங்கள் நிலங்கள் பறிக்கப்படும், ஜீவனோபாயம் அழிக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன் அவர்களிடம் வினவிய போது, வன இலாகா திணைக்களம்,வனஜீவராசிகள்திணைக்களம்,தொல்லியல்

தொடர்ச்சி: பக்கம் 14

# இன அழிப்புக்கான நீதியையும் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வையும் கைவிட்டாரா கஜேந்திரகுமார்?




**ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் இணைப்பாளர் திரு. செந்தில்குமார் அவர்கள் கலந்து கொண்டு, கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தமிழக வருகை, அதன் பின்னணியில் எழுந்த விமர்சனங்கள், இன அழிப்புக்கான நீதி, அரசியல் தீர்வு, பொதுவாக்கெடுப்பு, கூட்டாட்சி ஆகிய விடயங்கள் குறித்து விரிவாக கருத்து தெரிவித்தார்.**

**கேள்வி :**

**ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு என்ற அமைப்பு எவ்வாறு உருவானது? அதன் செயற்பாட்டு தன்மை என்ன?**

**பதில் :**

ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு என்பது தமிழ்நாட்டில் இயங்கும் ஈழ ஆதரவு அமைப்புகளை ஒரே அரசியல்புரிதலுக்குள் ஒருங்கிணைக்கும் ஒரு முயற்சியாக உருவானது. இதில் திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ் தேசியவிடுதலை இயக்கம், பெரியார் திராவிட மரபைச் சார்ந்த அமைப்புகள், தமிழ் தேச மக்கள் முன்னணி உள்ளிட்ட பலஇயக்கங்கள் காலகட்டத்திற்கேற்ப இணைந்து செயல்பட்டு வந்துள்ளன.

இந்த கூட்டமைப்பு ஒரு நிரந்தரமான மைய கட்டமைப்பைக் கொண்ட அமைப்பாக இல்லாமல், ஈழத் தமிழர்தொடர்பான முக்கிய அரசியல் நிலைப்பாடுகள், போராட்டங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் போது ஒருங்கிணைந்துசெயல்படும் ஒரு அரசியல் மேடையாகவே இயங்கி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் ஈழ ஆதரவு அரசியல்நடவடிக்கைகள் குறைந்திருந்தாலும், சர்வதேச சூழல், இலங்கையின் அரசியல் மாற்றங்கள், இந்தியாவின் நிலைப்பாடுஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மீண்டும் இந்த கூட்டமைப்பை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

**கேள்வி :**

**டிசம்பர் 18 அன்று கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தலைமையிலான குழு தமிழகம் வந்து முதலமைச்சரைச் சந்தித்தது. அதன்பின்னர், "அவர் கள் கொள்கையை கைவிட்டுவிட்டார்கள்" என்ற விமர் சனங்கள் எழுந்துள்ளன. இதை நீங்கள்எப்படி பார்க்கிறீர் கள்?**

**பதில் :**

அந்த சந்திப்பைச் சுற்றி ஏற்பட்ட விமர்சனங் களை மிக எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். கஜேந்திர குமார்பொன்னம்பலம் தலைமையிலான குழு தமிழ்நாடு முதலமைச்சரைச் சந்தித்து இரண்டு கோரிக்கை மனுக்களை வழங்கினர். ஒன்று ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பானது. மற்றொன்று இருநாட்டு மீனவர் பிரச்சனைதொடர்பானது.

அரசியல் தீர்வு தொடர்பான மனுவில், இலங்கை யின் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஒற்றையாட்சி அம்சம், குறிப்பாகArticle 2, எவ்வாறு அதிகாரப் பகிர்வுக்கு தடையாக உள்ளது என்பதையே அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதாவது,இந்த ஒற்றையாட்சி பிரிவை மாற்றாமல் எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் சாத்தியமில்லை என்ற அரசியல் – சட்டஉண்மையை அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

இதனை வைத்து "தமிழீழ கோரிக்கை கைவிடப் பட்டது" என்று தீர்மானிப்பது சரியான அணுகுமுறை அல்ல. அந்த மனு முழுமையாக ஒரு தொழில்நுட்பத் தன்மையுடன் எழுதப்பட்ட அரசியல் விளக்க மனு. அதில் உள்ளடக்க அரசியல்இருக்கலாம்; ஆனால் அதை ஒரு கொள்கை விலகலாக உடனடியாகக் குற்றம் சாட்ட முடியாது.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு திரு. செந்தில்குமார் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாச கர்களுக்காக இங்கே தருகின் றோம். இந்த நேர் காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி :**

**"கூட்டாட்சி கோரிக்கை என்பது தமிழீழக் கோரிக்கைக்கு எதிரானது" என்ற விமர்சனம் தமிழகத்தி லும் ஈழத் திலும் எழுந்துள்ளது. இந்த விமர்சனத்தில் நியாயம் உள்ளதா?**

**பதில் :**

இந்த விமர்சனத்தில் ஒரு அளவு அரசியல் உணர்வு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. தமிழீழம், சுயநிர்ணய உரிமை, பொதுவாக்கெடுப்பு ஆகியவை ஈழத்தமிழர் அரசியலின் அடிப்படை கோரிக்கைகள். அந்த அடிப் படையில்,கூட்டாட்சி பற்றி பேசுவது ஒரு பின்னடைவு போல தோன்றலாம்.

ஆனால் அரசியல் என்பது ஒரே நேரத்தில் பல தளங்களில் செயல்பட வேண்டிய ஒரு தந்திரம். பேச்சுவார்த்தை மேசையில் ஒரு கோரிக்கையை முன் வைப்பது, இறுதி இலக்கை கைவிடுவதாக அர்த்தமல்ல. மாறாக, சிங்களஅரசின் ஒற்றையாட்சி பிடி வாதத்தை உலகிற்கு வெளிப்படுத்தும் ஒரு உத்தியாகவும் இதைப் பார்க்கலாம்.

முக்கியமான கேள்வி என்னவென்றால், அவர்கள் இன அழிப்பை ஒப்புக்கொள்கிறார்களா? இன அழிப்புக்கான நீதியைகோருகிறார்களா? இந்த இரண்டு அம்சங்களில்தான் இன்று ஒருவரின் அரசியல் நிலைப்பாட்டை அளவிட வேண்டும்.கூட்டாட்சியா, தமிழீழமா என்ற விவாதத்தைக் காட்டிலும், இன அழிப்பு என்ற உண்மையை ஏற்கிறார்களா என்பதேஇன்று மிக முக்கியமான அரசியல் சோதனை.

**கேள்வி :**

**ஆனால் அந்த கோரிக்கை மனுவில் "முள்ளி வாய்க்கால் இன அழிப்பு" அல்லது "இன அழிப்புக்கான நீதி" குறித்த எந்தகுறிப்பும் இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இதைப் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில் :**

இதுதான் உண்மையில் மிகவும் முக்கியமான குற்றச்சாட்டு. நாங்கள் வெளியிட்ட அறிக்கையிலும் இதை தெளிவாகக்குறிப்பிட்டுள்ளோம். ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வையும், இன அழிப்புக்கான நீதியையும் ஒருபோதும் பிரித்துப்பார்க்க முடியாது. முள்ளிவாய்க் காலுக்குப் பிறகான காலகட்டத்தில், இன அழிப்பை ஒதுக்கிவிட்டு அரசியல் தீர்வு பற்றிபேசுவது ஈழத்தமிழர் அரசியல் நிலைப்பாட்டுக்கு முரணானது.

இன்று ஈழத்தமிழர்களிடம் இருக்கும் மிகப் பெரிய அரசியல் வலிமை என்னவென்றால், அது ஆயுத வலிமை அல்ல,பொருளாதார வலிமை அல்ல. அது முள்ளிவாய்க்கால் இன அழிப்பு என்ற அறவலிமை. சர்வதேச அளவில் ஐக்கியநாடுகள் சபை, மனித உரிமை பேரவை, சர்வதேச விசாரணைகள், சேனல்-4 ஆவணப்படங்கள் ஆகிய அனைத்தும்இந்த இன அழிப்பை ஒரு உலகப் பொருளாக மாற்றியுள்ளன.

இந்த இன அழிப்பு என்ற அடிப்படையை விட்டுவிட் டால், அரசியல் தீர்வு கோருவதற்கான நியாயமும், உலகத்தை அணுகும் அரசியல் வலிமையும் ஈழத்தமிழர்களிடம் இருந்து பறிபோகும். எனவே, இன அழிப்புக்கான நீதி எந்த அரசியல்செயல்பாட்டிலும் மையமாக இருக்க வேண்டும்.

**கேள்வி :**

**இறுதியாக, தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள செயற்பாட்டாளர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

**பதில் :**

இன்று ஈழத்தமிழர் அரசியல் ஒரு மிகக் கடினமான கட்டத்தில் இருக்கிறது. ஆயுத வலிமை இல்லாத இந்த காலத்தில், ஒரே வலிமை ஒற்றுமையும், அரசியல் தெளிவும், அறவலிமையும் தான். தனித்தனியாகச் சிதறிச் செயல்படுவதற்குப்பதிலாக, ஒருங்கிணைந்த, கூட்டுத் தலைமையுடன், நுணுக்கமான ராஜதந்திரத்துடன் செயல்பட வேண்டிய தேவைஉள்ளது.

தமிழகமும் ஈழமும் பிரிந்துவிட்டன என்ற மன நிலையை உடைக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள எட்டு கோடி தமிழ்மக்கள் ஈழத்தமிழர்களின் மிகப்பெரிய அரசியல் பலம். அந்த உறவை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டியது காலத்தின்கட்டாயம்.

கஜேந்திரகுமார் தலைமையிலான குழுவின் தமிழக பயணம் முழுமை பெறாத ஒரு முயற்சி என்றாலும், அது முற்றிலும்நிராகரிக்கப்பட வேண்டியதல்ல. அதை

தொடர்ச்சி: பக்கம் 13

# மலையகத் தியாகிகள் வாரம்:

## வரலாற்றின் வேர்களும் உரிமைகளுக்கான எதிர்காலப் பயணமும்



ஒரு சமூகத்தின் இருப்பு என்பது அதன் வரலாற்றின் ஆழத்திலும், அந்த வரலாற்றைக் கட்டியெழுப்பச் சிந்தப்பட்ட இரத்தத்திலும் தங்கியுள்ளது. “வேர் இல்லாத மரமும், வரலாற்றை மறந்த சமூகமும் நீடித்து நிலைக்க முடியாது” என்ற கூற்றுக்கு இணங்க, இலங்கையின் மலையகத் தமிழ் சமூகம் தனது இருநூறு ஆண்டுகால வரலாற்றில் சந்தித்த இழப்புகளும், தியாகங்களும் ஈடு இணையற்றவை. இலங்கையின் பொருளாதாரத் தூணாகத் திகழும் தேயிலைத் தோட்டங்களை உருவாக்குவதற்காகக் காடு மேடுகளைத் திருத்தி, குளவிக் கடியிலும், கொடிய நோய்களிலும் மடிந்து போன ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் ஆன்மாக்கள் இன்றும் அந்த மலைச் சரிவுகளில் அலைந்து கொண்டிருக்கின்றன.



அவர்களின் தொடர்ச்சியான உரிமைப் போராட்டத்தின் முதல் வித்தாகத் திகழ்ந்த முல்லோயா கோவிந்தன் தொடங்கி, இன்றுவரை நிலத்திற்காகவும், ஊதியத்திற்காகவும் போராடும் ஒவ்வொரு தொழிலாளியும் இந்த வரலாற்றின் நாயகர்களே. மலையகத் தியாகிகள் வரலாற்றில் 1940 ஜனவரி 10 என்பது ஒரு மறக்க முடியாத திருப்புமுனை. 1930-களின் இறுதியில் பிரித்தானியக் கம்பனிகளின் ஆதிக்கத்தில் இருந்த தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். மிகக்குறைந்த ஊதியம், முறையற்ற வேலை நேரம் மற்றும் அடிப்படை வசதிகளற்ற லயன் குடியிருப்புகள் எனத் தொழிலாளர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர்.

1939 ஆம் ஆண்டின் இறுதியில் ஹேவாஹெட்ட ‘முல்லோயா’ தோட்டத்தில் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளுக்காகவும், சம்பள உயர்வுக்காகவும் கிளர்ந்தெழுந்தனர். இது இலங்கைப் பெருந்தோட்ட வரலாற்றில் ஒரு தீர்க்கமான தொழிற்சங்கப் போராட்டமாக மாறியது. 1940 ஜனவரி 10ஆம் திகதி, போராட்டத்தை ஒடுக்குவதற்காகப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முல்லோயா கோவிந்தன் அநியாயமாகக் கொல்லப்பட்டார். இந்தத் துப்பாக்கிச் சூடு மலையக அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றை மாற்றியமைத்தது. தொழிலாளர்களின் இரத்தம் முதல்முறையாக உரிமைக்காகப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விவாதிக்கப்பட்டது. கோவிந்தனின் தியாகம் மலையக மக்களிடையே ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதன் நினைவாகவே, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 10 ஆம் திகதி “மலையகத் தியாகிகள் தினம்” ஆகவும், ஜனவரி 4 முதல் 10 வரை தியாகிகள் வாரமாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது

### மலையகத் தியாகிகளின் பரிமாணங்கள்

மலையக உரிமைப் போராட்டம் என்பது ஒரு சில சம்பவங்களுடன் சுருங்கிவிடக் கூடியதல்ல. அது தொழில் உரிமை, குடியுரிமை, மொழி உரிமை எனப் பல தளங்களைக் கொண்டது. முல்லோயா கோவிந்தனுக்குப் பிறகு 1970-களில் இடம்பெற்ற அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு எதிரான போராட்டங்கள் முக்கியமானது. குறிப்பாக, 1986 இல் வேதன உயர்வு கோரி நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டங்களின் போது பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது. சம்பளப் போராட்டம் என்பது நவீன காலத்தின் ஒரு மாபெரும் அறவழிப் போராட்டமாகும். இதில் பங்கேற்ற தொழிலாளர்கள் சந்தித்த அடக்குமுறைகளும், இழப்புகளும் வரலாற்றில் பதியப்பட வேண்டியவை. அதேநேரம், 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டம் மலையக மக்களின் முதுகெலும்பை உடைத்தது.

பல இலட்சக்கணக்கான மக்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர். இந்த அநீதிக்கு எதிராக காந்தி வழியில் அறப்போராட்டங்களை முன்னெடுத்த மலையகத் தலைவர்களும், அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தியாகங்கள் செய்த சாதாரண மக்களும் போற்றுதலுக் குரியவர்கள். கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலப் போராட்டத் திற்குப் பின்னரே பலருக்குக் குடியுரிமை கிடைத்தது என்பது வரலாற்றின் கசப்பான உண்மை. இதேவேளை, இனக்கலவரங்களின் போது மலையக மக்கள் நேரடியான இலக்குகளாக மாறினர். தோட்டப் பகுதிகளில் வீடுகள் எரிக்கப்பட்டன, மக்கள் அடித்துக் கொல்லப்பட்டனர். மலையக மக்களின் தியாகம் என்பது வெறும் தொழிற் சங்கப் போராட்டத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. இன வாதத்திற்கு எதிரான தற்காப்புப் போராட்டமாகவும் அது இருந்தது. வட-கிழக்கு நோக்கிய மலையக மக்களின் இடப்பெயர்வு என்பது அவர்களின் ஒரு புதிய தியாக அத்தியாயத்தின் தொடக்கமாகும்.

### உள்ளூர் எல்லையைத் தாண்டிய நினை வேந்தல்

முன்பு மலையகத் தியாகிகள் தினம் என்பது அந்தந்தத் தோட்டங்களுக்குள்ளும் அல்லது ஒரு சில தொழிற்சங்க அலுவலகங்களுக்குள்ளும் மட்டுமே முடங்கிக் கிடந்தது. ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. இன்று வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு என இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் மலையகத் தியாகிகளுக்காக சுடர் ஏற்றப் படுகின்றன.

இது இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையேயான ஒருமைப்பாட்டைக் காட்டுகிறது. மறுபுறம் ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் மலையக வம்சாவளியினரான புலம்பெயர் தமிழர்களும் இன்று சர்வதேசத் தளத்தில் இந்தத் தியாகங் களை எடுத்துச் செல்கின்றனர். சமூக ஊடகங்கள் வழியாக கோவிந்தன் போன்ற தியாகங்களை வரலாறு உலகெங்கும் பரப்பப்படுகிறது. தொழிற்சங்க அரசியலுக்கு அப்பாற்பட்டு, மலையக இளைஞர்கள் இன்று தங்களின் வரலாற்றைத் தேட ஆரம்பித்துள்ளனர்.

மருதன் ராம்

“வேர்களைத் தேடுதல்” என்ற நோக்கில் அவர்கள் முன்னெடுக்கும் கலை, இலக்கிய முயற்சிகள் தியாகிகளின் வரலாற்றைச் சாகாவரம் பெற்றதாக மாற்றுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் அடுத்த தலைமுறைக்கு மலையக தியாகிகள் புரிந்த தியாக செயல்கள் கடத்தப்படுவதில் குறைபாடு நிலவுகிறது. எனவே, மலையகத் தியாகிகளை வெறும் சிலைகளில் மட்டும் வைத்துப் பார்க்காமல், அவர்களின் கனவுகளை நனவாக்குவதே உண்மையான அஞ்சலியாகும்.

குறிப்பாக தியாகிகளின் பெயர்கள், அவர்கள் உயிர்நீத்த இடங்கள் மற்றும் போராட்டச் சூழல்கள் முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. இதற்கான ஒரு தேசிய நூலகம் அல்லது ஆவணக் காப்பகம் மலையகப் பகுதியில் உருவாக்கப்பட வேண்டும்.



ஒவ்வொரு தோட்டத்திலும் அந்தத் தோட்டத்தில் தியாகம் செய்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுத் தூபிகள் அமைக்கப்பட வேண்டும். தியாகிகள் எதற்காகப் போராடினார்களோ, அந்த அடிப்படைப் பிரச்சனை இன்றும் தீரவில்லை. “லயன் வாழ்க்கை” மாற வேண்டும். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நாம், ஒவ்வொரு தோட்டத் தொழிலாளிக்கும் சொந்தமாக ஒரு சிறு துண்டு நிலமும், கௌரவமான வீடும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மலையக இளைஞர்கள் பெருந்தோட்டத் துறையை விட்டு வெளியேறி, உலகளாவிய ரீதியில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறி வருகின்றனர். இந்தநிலை மேலும் வலுப்பெற வேண்டும். அறிவுசார் சமூகம் மட்டுமே தனது வரலாற்றை வீரியமாகப் பேச முடியும்.

தியாகிகளின் தியாகத்தால் கிடைத்த வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தி, சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும். “மலையகத் தமிழர்” என்ற தனித்துவமான தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்த

தொடர்ச்சி: பக்கம் 14

# “உரிமையைப் பேசும் கலைக்கு ஏன் இந்த அச்சம்? ‘சல்லியர்கள்’ ஒரு அரசியல் வாசிப்பு”




## சல்லியர்கள் திரைப்பட தடை குறித்த ஒரு பார்வை

ஜீவா பொன்னுசாமி D.F.Tech

ஆதி காலத்தில் மனிதனுக்கிடையே தகவல் தொடர்பு தொடர்பாக பயன்படுத்திய உத்திகள் பிற்காலத்தில் கலையாக உருமாற்றம் பெற்று வளர்க்கப்பட்டது. அன்றைய ஒலி இன்று இசையாக அன்றைய பாறை ஓவியம் இன்றைய நவீன ஓவியமாக பின்னர் கதை சொல்லல் என்பது இன்று கிராமியக்கலைகளாக என அனைத்தும் இன்று பல்வேறு முகங்களுடன் பல்வேறு வடிவங்களுடன் பல்வேறு மக்களின் மரபை பண்பாட்டை வாழ்வியல் கதைகள் என அனைத்தும் ஏதோ ஒரு கலையின் வெளிப்பாட்டின் மூலமே மனிதன் தனது அடுத்த தலைமுறைக்கு கடத்துகிறான்.



இந்த பரிமாற்றம் என்பது எந்த அளவிற்கு இருந்திருந்தால் இன்று நம் வாழ்வில் இருக்கும் ஒவ்வொரு அசைவுக்கும் பேச்சுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மூல வேரின் தாக்கம் இல்லாமல் நிகழ்ந்திருக்காது என்பதே உண்மை.

அப்படி சினிமா எனும் கலைகளின் குவியம் என்பது நமது வாழ்வியலின் அனைத்து கூறுகளையும் அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கான மிக பெரிய வலுவான ஒரு கலை வெளியாக உள்ளது. ஆனால் இன்று நாம் சந்தித்திருப்பது காலுக்கு கீழ் இருந்த பாசிசம் என்னும் பாம்பு கழுத்தை சுற்றி கொத்துவதற்கு நேரம் பார்த்து கொண்டு இருக்கிறது.



நமக்கு மட்டும் இல்லை உலகம் முழுவதும் பாசிசம் பட்டாடை விரிப்பைப்போல ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

கலைக்கும் கலைஞர்களுக்கும் விதிகள் கிடையாது அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. ஒரு கட்டத்திற்கு மேல் கலையும் கலைஞர்களும் எந்த சங்கிலியாக இருந்தாலும் உடைத்தெறிந்து விட்டு வெளியில் வந்துவிடுவார்கள்.



ஒரு உண்மையான கலைஞன் நேர்மையான கலைஞன் மக்களுக்கான கலைஞன் அத்தோடு கலை என்றுமே மக்களுக்கானது என்ற பொறுப்புணர்வுள்ள அவனது படைப்பு சுதந்திரம் என்பதை எல்லைகளற்ற ஒரு பெருவெளியே அவனது உலகம்.

இந்த சூழலில் ‘சல்லியர்கள்’ திரைப்படம் தமிழ் நாட்டில் வெளியிட முயற்சிக்கும் போது அதற்கு ஏற்பட்ட தடைகள் குறித்து பெரும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆனாலும் குறித்த படம் ஐரோப்பிய நாடுகளில் வெளியாகி தமிழ் மக்களின் வரவேற்பை பெற்று வருகின்றது. அதே நேரம் OTT தளத்திலும் படம் வெளியாகியுள்ளது.

**இயக்குநர் கிட்டு**



அரசு தணிக்கை குழுவில் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகும் ஒரு படம் வெளியிடுவதற்கு என்ன தடை இருக்கப்போகிறது. என்ன தடை இருக்கும், இருக்காது என்று நீங்கள் நினைத்தால் உங்களின் நெற்றிப் பொட்டில் சுத்தியல் கொண்டு அடித்து கதிகலங்க செய்யும் விதத்தில் ஒன்று நிகழும். அது தமிழ், தமிழன் தமிழரின் எதை பற்றியேனும் நீங்கள் திரைப்படமாக எடுத்திருந்தால் உங்களது படத்திற்கு தமிழக அரசு சான்றிதழ் கொடுத்திருத்தாலும் நாங்கள் திரையிட மாட்டோம். அப்படியே நீங்கள் அற வழியில் போராடினாலும் தரமாட்டோம். வேண்டுமென்றால் நாங்கள் கொடுக்கின்ற திரைப்படங்களில் கொடுக்கின்ற காட்சிகளில் மட்டும் உங்கள் படத்தை திரையிட்டு கொள்ளுங்கள்.



இதை யார் சொன்னது என்று நீங்கள் புலன் விசாரணை செய்தால் அது அனுமானின் வாலென நீளும். ஆம், தமிழையும் தமிழனைப் பற்றியும் பேசுவது பற்றி யாருக்கு பிடிக்காது. யார் நமக்கு மேல் இருந்துகொண்டு இதைச்செய்வது? பெரு முதலாளித்துவம் அவர்கள் பின்னால் இருப்பவர்களும் பல எண்ணிக்கை திரையரங்குகளை அதிக எண்ணிக்கையில் வைத்துக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை காட்டி அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று எண்ணுகிற பாசிக பெரு முதலாளிகள்தான் அவர்கள். அவர்களும் அவர்கள் பின்னால் இருப்பவர்களும் அல்லது அவர்களால் ஆட்டுவிக்கப்படுபவர்களும். எங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு உங்கள் படம் இருந்தால் பல எண்ணிக்கை திரையரங்கங்களில் பெரும் எண்ணிக்கை அளவில் திரையிடலுக்கும் அனுமதிப்போம். உரிமையை வழங்குவோம் இல்லை என்றால் அரசு அனுமதி கொடுத்திருந்தாலும் திரையரங்கங்கள் எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு நாங்கள் சொல்வதே விதி.

அந்த வகையில் ‘சல்லியர்கள்’ திரைப்படம் அரசு தணிக்கை சான்றிதழ் பெற்றிருந்தாலும் திரையரங்கங்களின் கட்டுப்பாடும் திரையிடல் எண்ணிக்கையும் பெரு முதலாளிகளின் கையில் இருப்பதால் கிடைத்த திரையரங்குகளின் மொத்த எண்ணிக்கையே 27தான் அதிலும் ஒரு சிலதில்தான் திரையிட அனுமதி தரப்பட்டது. பின்னர் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி அவர்களது குரல் ஆதரவு கேட்டவுடன் சிக்கல் வேறு வடிவில் சென்று இறுதியில் ஒரு ஒடிடியில் வெளியிட்டது. இயக்குநர் கிட்டு அவர்களிடம் பேசியதின் சாராம்சம் இதுவே.

**இயக்குநர் வ. கவுதமன்**



ஒரு கலைஞனோட படத்தை திரையிட ஏன் இவ்வளவு தூரம் அரசு அஞ்சுகிறது என்று பார்த்தால், அரசு இரண்டு விடயத்தை மட்டும் தான் பாக்கின்றது. எல்லா நாட்டு அரசுகளும் இரண்டு விடயத்தை மட்டும் தான் திரைப்படங்க ளில் வரவேற்கின்றது.

அது இரண்டுமே அறமற்ற பார்வையாகத்தான் இருக்கின்றது. ஒன்று மக்களுக்கான பொழுதுபோக்கு படமாக இருக்க வேண்டும். ஆட்சியாளர்களின் கருத்து என்னவென்றால் மனித மாண்பு குறித்து படம் இருக்க வேண்டும் என்று. அந்த மண்ணின் உடைய மொழி இனம் உரிமை இதையெல்லாம் படமாக்காமல் அதனோட மாண்பு பெருமை, மகத்துவத்தை கூற முடியாது. ஒரு மண்ணின் இனம் மொழி, உரிமை, இனம் இழந்த இழப்பையும் அடைய வேண்டிய அல்லது மீட்க வேண்டிய புரட்சியை சொல்லும் போது அது தடை செய்யப் படுகின்றது. உரிமை குறித்து பேசினாலே அதிகார வர்க்கங்கள் ஆடி போகும். ஆக அந்த அடிப்படையில் ‘சல்லியர்கள்’ திரைப்படம் தமிழ் இனத்தினுடைய கதை,மேலும் போர்க்களத்தில் நடக்கின்ற ஒரு

தொடர்ச்சி: பக்கம் 12

# வெனிசுலா - ஐ.நா.

## இப்போதே எடுக்க வேண்டிய ஆறு படிகள்

ஜெஃப்ரி டி. சாக்ஸ்



**ஜனவரி 5, 2026 அன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் ஜெஃப்ரி சாக்ஸ் ஆற்றிய உரையின் ஒரு பகுதி**

வெனிசுலா மீதான அமெரிக்க தாக்குதல் குறித்து கடந்த திங்கட்கிழமை கூடிய ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பேச்சாளர் ஜெஃப்ரி டி. சாக்ஸ் ஆற்றிய உரை வருமாறு:




திரு. தலைவர், பாதுகாப்பு கவுன்சிலின் சிறப்பு உறுப்பினர்களே, இன்று கவுன்சிலின் முன் உள்ள பிரச்சினைக்கு வெனிசுலா அரசாங்கம் காரணம் அல்ல. எந்தவொரு உறுப்பு நாடும் வலுக்கட்டாயமாக, வற்புறுத்தி அல்லது பொருளாதார ரீதியாக கழுத்தை நெரித்து வெனிசுலாவின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க அல்லது அதன் விவகாரங்களில் கட்டுப்பாட்டைப் பயன் படுத்த உரிமை உள்ளதா என்பதுதான் பிரச்சினை.

இந்தக் கேள்வி நேரடியாக ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் பிரிவு 2, பிரிவு 4 க்கு செல்கிறது, இது எந்தவொரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது பலத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது. அந்தத் தடையை நிலைநிறுத்த வேண்டுமா அல்லது கைவிட வேண்டுமா என்பதை கவுன்சில் தீர்மானிக்க வேண்டும். அதைக் கைவிடுவது மிகவும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்.



இரகசியமான ஆட்சி மாற்றம் தொடர்பில், சில பின்னணியை நான் வழங்குகிறேன்.

1947 முதல், அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை மற்ற நாடுகளில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர பலவந்தம், இரகசிய நடவடிக்கை மற்றும் அரசியல் சூழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி வருகிறது.

இது கவனமாக ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றுப் பதிவுகளின் ஒரு விஷயம். தனது "ரகசிய ஆட்சி மாற்றம்" என்ற புத்தகத்தில், அரசியல் விஞ்ஞானி லிண்ட்சே ஓ'ரூர்க், 1947 மற்றும் 1989 க்கு இடையில் மட்டும் 70 ஆட்சி மாற்ற நடவடிக்கைகளை அமெரிக்கா முயற்சித்ததாக ஆவணப்படுத்துகிறார்.

இந்த நடைமுறைகள் பனிப்போருடன் முடிவடையவில்லை. 1989 முதல், பாதுகாப்பு கவுன்சிலின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட முக்கிய அமெரிக்காவின் ஆட்சி மாற்ற நடவடிக்கைகள், மிகவும் பின் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன. அவை வருமாறு: ஈராக் 2003, லிபியா 2011, சிரியா 2011 இல் தொடங்குகிறது, ஹோண்டுராஸ் 2009, உக்ரைன் 2014 மற்றும், 2002 முதல் வெனிசுலா. பயன்படுத்தப்படும் முறைகள் நன்கு நிறுவப்பட்டவை மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் பின்வருவன அடங்கும்:

**வெளிப்படையான போர்**
**ரகசிய உளவுத்துறை நடவடிக்கைகள்**
**அமைதியின்மை விசாரணை**
**ஆயுதக் குழுக்களுக்கான ஆதரவு**
**வெகுஜன மற்றும் சமூக ஊடகங்களை கையாளுதல்**
**இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தல்**
**இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகள்**
**தவறான தகவல் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரப் போர்.**
**சட்டவிரோத நடவடிக்கைகள்**

இந்த நடவடிக்கைகள் ஐ.நா. சாசனத்தின் கீழ் சட்ட விரோதமானவை,மேலும் அவை பொதுவாக தொடர்ச்சியான வன்முறை, கொடிய மோதல், அரசியல் உறுதியற்ற தன்மை மற்றும் பொதுமக்கள் ஆழ்ந்த துன்பத்திற்கு வழிவகுக்கும். வெனிசுலா தொடர்பான சமீபத்திய அமெரிக்க பதிவும் தெளிவாக உள்ளது.



ஏப்ரல் 2002 இல், வெனிசுலா அரசாங்கத்திற்கு எதிரான ஒரு சதி முயற்சியை அமெரிக்கா அறிந்திருந்தது மற்றும் அதற்கு ஒப்புதல் அளித்தது. 2010 களில், அரசாங்க எதிர்ப்பு போராட்டங்களில் அமெரிக்கா சிவில் சமூக குழுக்களுக்குத் தீவிரமாக ஆதரவுகளை வழங்கியது. அரசாங்கம் போராட்டத்தை ஒடுக்கியபோது, அமெரிக்கா தொடர்ச்சியான தடைகளை விதித்தது.

2015 ஆம் ஆண்டில், ஜனாதிபதி பராக் ஒபாமா வெனிசுலாவை "அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைக்கு ஒரு அசாதாரண அச்சுறுத்தல்" என்று அறிவித்தார், அதை இங்கு நான் மேற்கோள் காட்டுகிறேன்.



2017 ஆம் ஆண்டில், ஐ.நா. பொதுச் சபையின் ஒன்றுகூடலில் லத்தீன் அமெரிக்கத் தலைவர்களுடன் ஒரு இரவு விருந்தில், ஜனாதிபதி டிரம்ப், அரசாங்கத்தை கவிழ்க்க அமெரிக்கா வெனிசுலா மீது படையெடுப்பதற்கான விருப்பத்தை வெளிப்படையாக விவாதித்தார்.

2017 முதல் 2020 வரை, அமெரிக்கா அரசு எண்ணெய் நிறுவனமான பெடேசா மீது கடுமையான தடைகளை விதித்தது. 2016 முதல் 2020 வரை எண்ணெய் உற்பத்தி 75% குறைந்துள்ளது மற்றும் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 62% குறைந்துள்ளது.

ஐ.நா. பொதுச் சபை இதுபோன்ற ஒருதலைப்பட்ச வற்புறுத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக மீண்டும் மீண்டும் பெருமளவில் வாக்களித்துள்ளது. சர்வதேச சட்டத்தின் கீழ், பாதுகாப்பு கவுன்சிலுக்கு மட்டுமே இதுபோன்ற நடவடிக்கைகளை விதிக்க அதிகாரம் உள்ளது.

ஜனவரி 23, 2019 அன்று, அமெரிக்கா ஒருதலைப் பட்சமாக திரு. ஜுவான் கைடோவை இடைக்கால ஜனாதிபதியாக அங்கீகரித்தது, சில நாட்களுக்குப் பிறகு வெளிநாடுகளில் வைத்திருக்கும் சுமார் 7 பில்லியன் டாலர் மதிப்புள்ள வெனிசுலா இறையாண்மை சொத்துக்களை முடக்கியது மற்றும் இந்த சொத்துக்களில் சிலவற்றின் மீது நியமிக்கப்பட்ட அதிகாரத்தை வழங்கியது.

இந்த நடவடிக்கைகள் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடிக்கும் தொடர்ச்சியான அமெரிக்க ஆட்சி மாற்ற முயற்சியின் ஒரு பகுதியாகும்.

கடந்த ஆண்டில், அமெரிக்கா ஏழு நாடுகளில் குண்டு வீச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, அவற்றில் எதுவும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலால் அங்கீகரிக்கப்படவில்லை, மேலும் அவற்றில் எதுவும் சாசனத்தின் கீழ் சட்டப்பூர்வமான தற்காப்புக்காக மேற்கொள் எப்படவில்லை. இலக்கு வைக்கப்பட்ட நாடுகளில் ஈரான், ஈராக், நைஜீரியா, சோமாலியா, சிரியா, ஏமன் மற்றும் இப்போது வெனிசுலா ஆகியவை அடங்கும்.

கடந்த மாதத்தில், கொலம்பியா, டென்மார்க், ஈரான், மெக்ஸிகோ, நைஜீரியா மற்றும் நிச்சயமாக வெனிசுலா உள்ளிட்ட ஆறு ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு எதிராக ஜனா


தொடர்ச்சி: பக்கம் 14



# அமெரிக்க வான்படையிடம் தோற்றதா வெனிசுலாவின் வான்பாதுகாப்பு படை?

— வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஜனவரி 3 ஆம் தேதி காரக்கஸில் நடந்தது, பல்துருவ உலக ஒழுங்கில் பெரும் சக்திகளுக்கு இடையிலான முதல் நேரடி மோதலாகும். இரண்டாம் உலகப் போரின் ஒத்திகை என்று வரலாற்றாசிரியர்கள் அழைப்பதற்கான தொடக்கக் காட்சி இதுவாகும். அமெரிக்க டோமாஹாக் ஏவுகணைகள் மூலோபாய இலக்குகளைத் தாக்கின. டெல்டா சிறப்பு படையினர் நிக்கோலஸ் மதுரோவைக் கைப்பற்றினர். சில மணி நேரங்களுக்குள், வெனிசுலா அரசாங்கம் சரிந்தது. எந்தவொரு தந்திரோபாய நடவடிக்கையிலும், அது இரா ணுவ சிறப்பம்சமாகும். ஆனால் ஒரு மூலோபாயக் கண் ணோட்டத்தில், இது எதிர்காலத்தில் தோல்வியானது.



1949 ஆம் ஆண்டில் இருந்து 1989 ஆம் ஆண்டு வரையிலும் அமெரிக்கா மேற்கொண்ட 70 இற்கு மேற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புக்கள் அதற்கு தற்காலிக வெற்றியை கொடுத்தாலும் இன்று அமெரிக்காவை ஏனைய நாடுகள் சவால் செய்யும் நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளன.

இந்த படை நடவடிக்கையைப் பொறுத்வரையில் அமெரிக்க சிறப்பு படையினருக்கு மிகவும் வெற்றிகரமான நடவடிக்கை என்பதுடன், உலகில் அதன் மதிப்பையும் உயர்த்தியுள்ளது. அதிலும் குறிப்பாக துல்லியமாக திரட்டப்பட்ட புலனாய்வுத் தகவல்கள், எதிரிகளின் சிறப்பு படையணிக்குள் ஊடுருவியமை, எதிரியை திசை திருப்பி யமை, சைபர் தாக்குதல், சிறப்பான புலனாய்வுத் தகவல்கள் என பல முனை போரை ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட தாக்குதல் இது.

கடந்த செப்ரம்பர் மாதம் வெனிசுலாவின் கடலை அமெரிக்காவின் ஜெரால்ட் போர்ட் விமானந்தாங்கி கப்பல் உட்பட பல கடற்படைக் கப்பல்கள் மற்றும் வான்படையினர் முற்றுகையிட்டு போதைவஸ்த்து கடத்தல்காரர்களை தாக்குவதாக கூறியதும், அருகில் உள்ள தீவுகளில் போர் விமானங்களை குவித்து ஒரு இராணுவ தரையிறக்கத்துக்கு தயார் படுத்துவது போல காண்பித்து தமது இந்த இரகசிய நடவடிக்கை வெளியில் தெரியாமல் இருப்பதற்கான திசை திருப்பும் உத்தியாகும்.



அதாவது கடற்படையின் கலங்களில் இருந்து வெனிசுலாவின் பாதுகாப்பு மற்றும் பலம் பலவீனம் தொடர்பான தகவல்கள் திட்டப்பட்டன. அதேசமயம், கடந்த ஆகஸ்ட் மாதமே அமெரிக்காவின் சி.ஐ.ஏ புலனாய்வு த்துறையினர் வெனிசுலாவிற்குள் களமிறக்கப்பட்ட னர். அவர்கள் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ வின் தனிப்பட்ட நடமாட்டங்கள், அவரின் சந்திப்புக் கள், தங்குமிடங்கள், அவரின் தனிப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகள் உட்பட அனைத்தையும் தீவிரமான கண்காணித்து தகவல்களை சேகரித்திருந்தனர். தமது நடவடிக்கைகளுக்கு உதவியாக வெனிசுலாவில் உள்ள படை அதிகாரிகள், அரச அதிபாரிகள், மற்றும் மதுரோவின் உள்ளக வட்டாரங்களில் உள்ள அதிகாரிகளையும் அதிக நிதி செலவழித்து தமக்கு சார்பாக பயன்படுத்தியிருந்தனர்.

அதாவது டெல்ட்டா சிறப்பு படையினரின் பணியை இலகுவானதாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றியது இந்த துல்லியமான புலனாய்வு மற்றும் ஊடுருவல்கள் தான். ஏற்கனவே ஒரு சாத்தியமான தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த, தங்களுக்கு நெருக்கமாகத் தெரிந்த வசதிகளில் தற்காப்பு நிலைகளை வைத்திருக்கும் பெருமளவான மிகவும் அனுபவம் வாய்ந்த சிறப்பு ஜனாதிபதி பாதுகாப்புப் படையினரை, தாக்குதல் நடத்தியவர்கள் ஒரு உயிரிழப்பு கூட ஏற்படாமல் முற்றிலுமாக அழிப்பது நடைமுறையில் சாத்தியமற்றது.

இறங்தவர்களில் கியூபா நாட்டின் இரண்டு கேணல் தர அதிகாரிகள் உட்பட 32 வீரர்கள் உள்னர், மொத்தமாக 80 வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் அருகில் இருந்து கொல்லப்பட்டதாக வெனிசுலா அறிக்கைகள் கூறுகின்றன. அதாவது இது உள்வீட்டு வேலை என்றே ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. என்ன நடந்தது என்பதை வெனிசுலா இன்னும் விபரமாக கூறவில்லை.



மேலும் அமெரிக்க நடவடிக்கை வெனிசுலாவின் வான்பாதுகாப்பு படையினரிடமிருந்து சிறிய எதிர்ப்பையே எதிர்கொண்டது, ஏவுகணைகள் ஏவப்படவில்லை, வானில் போர் விமானங்கள் ரோந்து செல்லவில்லை, வெனி சுலாவின் வானத்தில் நூற்றுக்கணக்கான பீரங்கிக் குண்டுகள் காணப்படவில்லை என்பது வெனிசுலாவின் வான் பாதுகாப்பு படையினர் போரிடவே இல்லை என்பதற்கான தெளிவான அறிகுறியாகும். ஹெலிகாப்டர்கள் சாம் ரக ஏவுகணைகள் மற்றும் பீரங்கி குண்டுகளுக்கு கடினமான இலக்கு அல்ல.



வெனிசுலா வான்பாதுகாப்பு அமைப்புகளை முற்றாக முடக்குவது (ஜாம்) சாத்தியமில்லை, குறிப்பாக அமெரிக்காவின் NGJ அமைப்புகள் மேம்பட்ட ரஷ்ய ரேடார்களை சிதைக்க வடிவமைக்கப்பட்டுள்ளது, அதில் அதிக சக்தி மற்றும் திசை AESA பீம்கள் உள்ளன. ஆனால் கராகஸின் ஒரு பகுதியை உள்ளடக்குவதற்கு பல படைப்பிரிவுகள் தேவைப்படும், எனவே இவ்வளவு பெரிய பகுதியை ஜாம் செய்வது மிகவும் சிக்கலானது மற்றும் சாத்தியமற்றது. S-300VM இன் ரேடார்கள் தொடர்ச்சியான ஜாமிங்கைத் தவிர்க்க விரைவான அதிர்வெண் தாவலைப் பயன்படுத்துகின்றன, மேலும் ரேடாரின் கையொப்பத்தைக் குறைக்கும் LPI முறைகளுடன், NGJ போன்ற ஜாமர்களைக் கண்டறிந்து தலையிடுவதை கடினமாக்குகிறது.



Buk-M2 இதேபோன்ற ECCM திறன்களைக் கொண்டுள்ளது,அது ஜாமிங்கிற்கு அதிக எதிர்ப்பு கொண்டது. அமெரிக்கர்களால் இதைச் செய்ய முடியாது என்று அர்த்தமல்ல, ஆனால் பல இடங்களில் உள்ள பேட்டரிகளில் அதைத் தொடர்ந்து செய்வது சாத்தியமில்லை. கூடுதலாக, Buk-M2 மற்றும் Pechora-2M இரண்டும் எலக்ட்ரோ-ஆப்டிகல்/டிவி/IR சேனல்களை காப்புப்பிரதிகளாகக் கொண்டுள்ளன, அவை கடுமையான நெரிசலில், செயலில் உள்ள ரேடார் இல்லாமல் கண்காணிக்க அனுமதிக்கின்றன. அவை இயக் கப்பட்டிருந்தால், அந்த ஹெலிகாப்டர்கள் கராகஸ் மீது

தொடர்ச்சி: பக்கம் 12

## வெனிசுலாவில் ... தொடர்ச்சி...

பின்னால் வலுவான பொருளாதாரக் காரணங்கள் உள்ளன. குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி அச்சுறுத்தல்களில் இருந்து இலங்கை இன்னும் முழுமையாகவிடுபடவில்லை.

இலங்கைப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 44 சதவீத இறக்குமதி வரி 20 சதவீதமாகக் குறைக் கப்பட்டிருந்தாலும், அதுஇன்னும் ஒரு நிரந்தர உடன் படிக்கையாக உறுதி செய்யப்படவில்லை.

இத்தகைய சூழலில், ட்ரம்பை நேரடியாகப் பகைத்துக் கொள்வது இலங்கையின் ஏற்றுமதித் துறையைச் சிதைத்து, மீண்டுவரும் பொருளாதாரத்தைப் பாதாளத்தில் தள்ளிவிடுமென அநுர அரசாங்கம் அஞ்சுகிறது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்காவின் முதலீடுகளை ஈர்க்கவும்இலங்கை பாடுபட்டு வருகிறது. இந்தச் சூழலில், இடதுசாரிக் கொள்கைக்காக அமெரிக்காவை எதிர்ப்பது தற்கொலைக்குச்சமமானது என்று அரசாங்கம் கருதுகிறது.

இதனால்தான், ஜே.வி.பி. என்ற கட்சி தனது கொள்கை அடையாளத்தைப் பேணிக் கொள்ள அமெரிக்காவை எதிர்க்கிறது. ஆனால் அரசாங்கம் தனது பிழைப்புக்காகவும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நாட்டின் பொருளாதாரநலனுக்காகவும் அமெரிக்காவுடன் இணங்கிப் போகிறது. இது கொள்கை உறுதியற்ற சுயலாப அரசியலின் வெளிப்பாடாகும்.

அரசாங்கத்தின் இத்தகைய இரட்டை நிலைப்பாடு என்பது கொள்கைக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான விடயமாகும். அதாவது, ஒருபுறம் தனது இடதுசாரி வேர்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயமும் மறுபுறம் அமெரிக்காவின் வரிஅச்சுறுத்தல் மற்றும் பொரு ளாதாரத் தடைகளில் இருந்து தப்பிக்க வேண்டிய தேவையும் உள்ளது.

இந்த இரண்டுக்கும் இடையே அநுர அரசாங்கம் மெல்லிய நூலில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அது ஒட்டுமொத்தநாட்டுக்குமே ஆபத்தானது. நவீன பூகோள ஒழுங்கில் பிராந்திய அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவல்லது.

மற்றொருபுறம், அநுர அரசாங்கம் 'ஒரே சீனக் கொள்கை'யை ( One china policy) ஆதரிப்பதாகத் திட்ட வட்டமாக அறிவித்துள்ளது. இது சீனாவுடன் ஜே.வி.பிக்கு காணப்படும் நெருக்கத்தையும் ஆட்சிக்கான ஆதர வைத்தக்கவைத்துக்கொள்வதற்காகவும் எடுக்கப்பட்ட முக்கி யமானதொரு நகர்வாகும் என்பது வெளிப்படையானது.

ஆனால், சீனா தாய்வானை சீண்டிக்கொண்டிருக் கையில் அநுர அரசாங்கம் அதனை எதிர்க்கவில்லை. இறையாண்மை மீதானசீண்டலாக கருதவில்லை. ஜன நாயகத்தின் மீதான அச்சுறுத்தலாக பார்க்கவில்லை. ஆகக் குறைந்தது ஒரு கரிசனையை வெளிப்படுத்திய அறிக் கையைக் கூட வெளியிடவில்லை. எதிர்காலத்திலும் அது நடைபெறப்போவதில்லை.

ஆகவே அநுர அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளும், பிரதிபலிப்புக்களும் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில்ஆட்சியைக் கைப்பற்றினாலும், ஜே.வி. பியின் அடிப்படைக் கொள்கைகள் இன்னும் மாறவில்லை என்பது மிகத்தெளிவாகஉறுதிப்படுத்தப்படுவதாக உள்ளது.

ஜே.வி.பியினர் ஆட்சி அதிகாரத்திற்காக 'மாறு வேடம்' போட்டிருந்தாலும், சந்தர்ப்பம் கிடைக்கும்போது தங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மனநிலையை வெளிப் படுத்தத் தயங்குவதில்லை. கூடவே அது சிங்களமைய வாதத் தையும் உள்ளீர்த்துக்கொள்கின்றமையானது அதீத உணர்வுபூர்வமானதாக உருவெடுக்கும் சூழலைக் கொண் டிருக்கின்றது,

மேலும்ஜே.வி.பி பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ள அமெரிக்க எதிர்ப்பு போக்கு, வரும் காலங்களில் இலங் கையின்வெளியுறவுக் கொள்கையில் பெரும் தாக் கத்தை ஏற்படுத்தும். ட்ரம்ப் நிர்வாகம் ஜே.வி.பியின் இந்த அறிக்கைகளை எப்படிக்கையாளப் போகிறது? இது இலங்கையின் வரிச் சலுகைகளைப் பாதிக்குமா? என்பது வரும் மாதங்களில் தெரியவரும்.

அந்த வகையில் தற்போதைய சூழலில் அரசாங் கத்தின் முதன்மை இலக்காக உள்ளது கொள்கை ரீதியான நேர்மையை விட, அதிகாரத்தைக் காப்பாற்றும் இராஜ தந்திரமே என்பது மட்டும் திண்ணம்.

## இந்தியா மீது 500% ... தொடர்ச்சி...

வாங்கியது, அதே நேரத்தில் இந்தியா ஏற்றுமதியில் சுமார் 38%. 2022 இல் உக்ரேன் படையெடுப்பிற்குப் பிறகு பிரேசில் மானிய விலையில் ரஷ்ய எண்ணெயை வாங்குவதை அதிகரித்தது, ஆனால் அந்த இறக்குமதிகள் சமீபத்திய மாதங்களில் கணிசமாகக் குறைந்துள்ளன.

ஆனால் ரஷ்யாவும் இந்தியாவும் அமெரிக்க அரசாங்கத்தின் மோசடியைக் கூறி, ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்வதைத் தொடரும், ஏனெனில் அச்சுறுத்தலைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் அமெரிக்காவிற்கு ஏற்படும் செலவு, குறிப்பாக சீனாவுடனான வர்த் தக பேச்சுவார்த்தைகளின் நடுவில், ஒருவேளை சிறிதளவு தள்ளுபடியில் கூட அது அமையும்" என கருதப்படுகின்றது..

கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மாஸ்கோவும் கீவும் வாஷிங்டனின் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், ரஷ்யா மீது அழுத்தத்தை அதிகரிக்க அமெரிக் காவின் சமீபத்திய அழுத்தம் வந்துள்ளது.

செவ்வாய்கிழமை, டிரம்ப் நிர்வாகம் முதல் முறையாக உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்குவதற்கான ஐரோப்பிய திட்டங்களுக்கு தனது ஆதரவை வழங்கியது, இதில் போருக்குப் பிந்தைய போர் நிறுத்த கண்காணிப்பு மற்றும் ஐரோப்பிய தலை மையிலான பன்னாட்டுப் படை ஆகியவை அடங்கும்.

உக்ரைனில் நேட்டோ உறுப்பு நாடுகளின் வீரர்களை நிறுத்துவதை ஏற்க மாட்டோம் என்று பலமுறை கூறிய ரஷ்யா, அத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பதாக இன்னும் குறிப்பிடவில்லை.

## அமெரிக்க வான்படையிடம் ... தொடர்ச்சி...

பறப்பது சாத்தியமற்றதாக இருந்திருக்கும். இறுதியாக, S-300 போன்ற அமைப்புகள் ஹோம்-ஆன்-ஜாம் (HOJ) திறனைக் கொண்டுள்ளன, இந்த முறையில் ஏவுகணை நேரடியாக நெரிசல் மூலத்தில் (மின்னணு குறுக்கீடு) ஒரு செயலற்ற இலக்காக செலுத்தப்படுகிறது. வானத்தில் பல விமானங்கள் இருப்பதால், ஹைப்பர்சோனிக் ஏவுகணைக்கு எதிராக சரியான ஒத்திசைவில் அனைத்து ரேடார்களையும் மூடுவது சாத்தியமில்லை

இறுதியாக, பயன்படுத்தப்படாத 5000 MANPADS உள்ளன. MANPADS இலிருந்து எந்த எதிர்வினையும் இல் லாமல் ஹெலிகாப்டர்கள் மிகவும் தாழ்வாக பறப்பதைக் கண்டோம், அது அந்த சூழ்நிலையில் பயனுள்ளதாக இருந்திருக்கும். சரி, MANPADS ஜாமர்களுடன் எந்த தொடர்பும் அற்றது, ஆனால் சுட வேண்டாம் என்ற உத்தரவுகளுடன் தொடர்புடையது.

எனினும் 160வது SOAR இன் ஹெலிகாப்டர்களில் சமீபத்திய லேசர் எதிர் நடவடிக்கை அமைப்புகள் பொருத் தப்பட்டுள்ளன. மேலும் அதிகாலை 2 மணிக்கு, MANPADS வீரர்கள் தயாராக இருப்பதற்கு அவர்கள் ரோபோக்கள் அல்ல, அவர்கள் 24/7 சுடத் தயாராக இல்லை. ஹெலிகாப்டர்கள் மிக வேகமாக நுழைந்தன, அவர்கள் வெளியேறும்போது சுட்டிருக்கலாம், ஆனால் ஜனாதிபதியை ஏற்றிச் செல்லும் ஹெலிகாப்டர்களைச் சுட அவர்கள் விரும்பாமல் இருந்திருக் கலாம்.

F-35 + Growler + NGJ உடன் கூடிய அமெரிக்க இலத்திரனியல் பாதுகாப்பு உபகரணங்கள் (EW ) சில சூழ் நிலைகளில் இந்தப் பாதுகாப்புகளை முறியடிக்க முடியாது என்று இங்கு கூறவில்லை, மாறாக, அவ்வளவு மாற்று வழிகள் இருந்தபோதும், வெனிசுலா வான்பாதுகாப்புகளின் மௌனத்திற்கு என்ன காரணம் என்பதே கேள்வி.

CIA பெரும்பாலும் வெனிசுலா இராணுவத்தில் உள்ள அனைத்து முக்கிய வீரர்களையும் வாங்கியுள்ளது, அவர்களை சண்டையிட வேண்டாம் என்றும் அமெரிக்க சிறப்புப் படைகளுக்கு ஒரு பாதையை வழங்கவும் பணித்திருக்கலாம்என்று தெரிகிறது.இது2000ஆம்ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கப் படைகள் பாக்தாத்திற்குள் நுழைந்தபோது ஈராக் படைகள் மற்றும் கூலிப்படைகளை வாங்கியது மற்றும் சிறிய ஈராக் குடியரசுக் காவல்படை மட்டுமே சில எதிர்ப்பைக் காட்டியது போன்றது. வெனிசுலா ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு மட்டுமே போராடியது, 80க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்,. எனவே, வெனிசுலாவின் முக்கியமான உயர் அதிகாரிகளில் கணிசமான பகுதியினர் வாஷிங்டனுக்குத் தெரிந்தவர்கள் மற்றும் அதன் சம்பளத்தில் உள்ளனர், எனவே ஆயுதப்படைகளிடமிருந்து தற்போதைய வெனிசுலா துணை ஜனாதிபதிக்கு எந்த குறிப்பிடத்தக்க உதவியும் வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. சில வெனிசுலா ஆயுதப்படைகள் இன்னும் அரசுக்கு விசுவாசமாக இருக்கலாம்.

உலகிலேயே மிகவும் சிறந்த ஜாமிங் தொகுதி அமெரிக்க டொலர்கள் தான். அது எத்தனை தசாப்தங்களாக போர்களைத் தீர்மானித்து வருகிறது, ரேடார்களை மூடுகிறது, வான் பாதுகாப்புகளை நடுநிலையாக்குகிறது, வெடிமருந்துகளை நாசமாக்குகிறது, நட்புரீதியான தீயை கூட ஏற்படுத்துகிறது என்பது மக்களுக்குத் தெரியாது... குறிப்பாக பொருளாதார ரீதியாக சரிந்த நாடுகள் மற்றும் சர்வாதிகாரத்தின் கீழ் உள்ள நாடுகளில். இது சந்தேகத்திற்கு இடமின்றி, இருக்கும் மிக சக்திவாய்ந்த ஆயுதம். எங்களால் விளக்க முடியாத ஏதாவது சம்பவங்கள் நடக்கும் போதெல்லாம், பல ஆண்டுகளுக்குப் பிறகு அதற்கான பதில் வெளிப்படுகிறது: அது அனைத்தும் பல மில்லியன் டாலர் பில்களுடன் வெளிவந்துள்ளன.

## எங்களுக்கு அறம் ... தொடர்ச்சி...

புரட்சிகரமான அல்லது மனிதநேயமிக்க செயலை சொல் கின்றது.

இது போர்களைக் காட்சிகளாக படைத்திருக்கின் றது. ஆனால் இந்த படைப்பில் எதிரி விழும்போது தன்னை



வீழ்த்த கடுமையாக ஆயுதங்களை கொண்டு அறம் மற்ற முறையில் ஏதோ ஒரு இடத்தில் மூச்சு விட்டு விழும்போது அவனுக்கும் உயிர் இருக்கு என்று அவனை சிதைத்து சின்னபின்னமாக ஆக்கி விட கூடாது. போர்களமாக இருந்தாலும் சுய நினைவு அற்று கிடைக்கிற அந்த நிலையில் அவனை காப்பாத்துறதுதான் தமிழ் இனத்தின் உடைய மரபு. 'எதிரிக்கும் அருள்வாய் நன்நெஞ்சே' அந்த அடிப்படையில் அவனை தூக்கிக்கொண்டு போய் தன் இரத்தத்தை கொடுத்து ஒருவரை காப்பாத்துகின்ற உன்னதத்தை இந்த உலகத்தில் பதிவு செய்யக் கூடாது. அந்த மனநிலைதான் அதிகாரவர்க்கம் இந்த படைப்பை தடுக்கின்றது.

தமிழ்நாட்டில் மொத்தம் 27 திரையரங்குகளில் திரையிட அனுமதி கொடுத்தார்கள். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு காட்சி. இப்படிப்பட்ட நிலையில்தான் நாங்கள் அதை எதிர்க்கிறோம். ஒரு படம் சரியில்லை என்றால் மக்கள் தான் தீர்ப்பு சொல்ல வேண்டும். தடைக்கு எதிராக பெரிய எதிர்ப்பும் கண்டனமும் வலுத்ததிற்கு பிறகு தான் அரசு தலையிட்டு திரையரங்குகளை வழங்க கூறியிருக்க வேண்டும். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

ஒரு கலை படைப்பு அவர்களின் அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துகிறதோ அவர்களின் முகத்திரை யினை தோலுரித்துக் காட்டுகிறதோ அவர்களைப் பற்றிய போலித்தனத்தை வெட்ட வெளிச்சம் போட்டு காட்டுகியதோ அதை அவர்கள் என்றைக்கும் வெளியில் தெரிய விடமாட்டார்கள்.

கிட்டு அவர்களின் படைப்பு இதில் ஏதோ ஒன்றில் உரக்க கேள்வி கேட்டிருக்க வேண்டும். அல்லது கேள்வி கேட்கும் ஞானத்தை பார்வையாளனுக்கு வழங்கியிருக்க வேண்டும். படத்தினை வெளியிட திரையரங்கம் தராமல் இல்லை ஆனால் குறைந்த திரையரங்கங்கள் குறைந்த காட்சிகள்தான் தர முடியும் என்று கூறப்பட்டது.

ஆக 'சல்லியர்கள்' படம் சிறிய படம் அதற்கு இவ்வளவு திரையரங்கமும் போதும். அதற்கு படத்தின் தரம் அவ்வளவாக இல்லை என்று சொல்லும் காரணம் எவ்வளவு போலியானது. சிறிய பொருட்செலவு பெரிய பொருட்செலவு என்று மக்களுக்கு முக்கியமில்லை. அவர்களுக்கு படத்தின் தரம்தான் முக்கியம் என்றார்.

இயக்குநர் வ.கவுதமன் கூறியது போல், சமூகத்தின் போக்கை முன்னேற்றப் பாதையில் மாற்றும் சக்தியாக இருக்கும் திரைப்படத்தின் மீதும் இந்த வல்லாதிக்க பாம்புச்சட்டை என்பது தேவையில்லை. அதை தோலுரித்து காட்டியே ஆக வேண்டும் என்றால் நமது ஒற்றுமை என்பது அனைவரின் கடமை. இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் பெரு முதலாளிகள் முதலீடு செய்த பின்னர் மக்கள் கூட்டம் சின்ன சின்ன படங்களுக்கு செல்வதும் நமக்கு சாதகமாக இல்லாமல் இருக்கும் படங்கள்- அதாவது தேவையானவற்றை பேசும் படங்கள்- மக்களிடம் கொண்டு சேர்க்கக்கூடாது என்பதிலும் அவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

ஆக, விடிவு என்பது ஒற்றை மையம். அந்த மையத்தை நோக்கி நம்மை குவிக்க நினைத்தவர்களுக்கு அது வெறும் கனவு தான். ஒருமித்த உரிமைக்குரல் இனி மேலாவது ஓங்கி ஒலிக்கட்டும். எல்லாவற்றுக்கும்...

• • •

## மாகாணசபை ... தொடர்ச்சி...

வில்லை.

சட்டதிருத்தம் நல்லாட்சி அரசில் நாடாளுமன்றில் சமர்ப்பித்த சமயம் அப்போது எதிர்கட்சி தலைவராக இருந்த இரா. சம்மந்தன் உள்ளிட்ட தமிழ்தேசிய கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 16, பேரும் எதிர்க்க வில்லை, மாகாணசபை தேர்தல் பற்றி அக்கறை காட்ட வில்லை.

இதற்கான காரணம் மாகாணசபையை விடவும் புதிய அரசியல் யாப்பு திருத்தம் மேற்கொள்வதையே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கூடிய அக்கறையும் கவனமும் செலுத்தியது.

நல்லாட்சியில் ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றாமல் நயவஞ்சகத்தால் தட்டிக்கழித்து நம்பிக்கை துரோகம் செய்த பின்னர்தான் 2020,ஆகஸ்ட்,05ல் பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் இருந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பும், ஏனைய தமிழ்தேசிய கட்சிகளுக்கும் மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும் என ஞானம் பிறந்தது. 2023 மே 27ல் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக பழைய முறையில் மாகாண தேர்தலை நடத்துமாறு நாடாளுமன்றில் சமர் பித்தார். அதனை அப்போது ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ரணில், அப்போது இருந்த பிரதமர் சஜீத் உட்பட எவருமே கணக்கெடுக்கவில்லை.

2024 நவம்பர் 19 தேர்தலுக்கு பின்னர் சுமந்திரன் 2023ல் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணையை மீண்டும் திகதியை மாற்றி தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு பாராளு மன்ற உறுப்பினர் சாணக்கியன் மீண்டும் 2025 ஜூலை14ல் சமர்பித்தார். அந்த பிரேரணையும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கணக்கில் எடுக்கவில்லை கிடப்பில் போட்டது.

இதேவேளை ஜனாதிபதி அநுர ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாம் பதவி ஏற்றால் மாகாண சபை தேர்தலை உடனே நடத்துவதாக குறிப் பிட்டும் இதுவரை மாகாணசபை தேர்தலுக்கான எந்த ஆயத்தங்களும் செய்யாத நிலையில் தற்போது எதிர்கட்சிகளுடைய அழுத்தம் காரணமாக கடந்த 2026 ஜனவரி 06 ல் மாகாணசபை தேர்தல் முறைமையைத் தெரிவு செய்வது குறித்து ஆராய்வது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்வைத்துள்ளார். இதன்படி 12 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட தெரிவுக்குழுக்க ளின் பெயர்களை சபாநாயகர் அறிவிப்பார். அதில் ஆளும் தரப்புக்கு 08 உறுப்பினர்களும், எதிர்கட்சிக்கு 04 உறுப்பினர் களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என தெரிகிறது.

இதற்கமைய, மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்பது குறித்து இந்தத் தெரிவுக்குழு ஆராயவுள்ளது.

அதன்பின்னர், இது தொடர்பான தனது முன் மொழிவுகளையும் பரிந்துரைகளையும் நாடாளு மன்றத் துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என அந்தக் குழுவுக்குப் பணிக்கப்படும்.

இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை புதிய முறையில் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமாக இருந்தால் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. எல்லை நிர்ணயம் செய்யப்படுதல் என்பது ஒரு சுலபமான விடயம் அல்ல. ஏனெனில் இலங்கையில் வெவ்வேறு இன மக்கள் வாழுகின்ற பல்வேறு பிரதேசங்கள் காணப்படுகின்றன. எல்லை நிர்ணயம் என்று வருகின்ற பொழுது அந்த பிரதேசங்களில் பல பிரச்சனைகள் எழலாம்.

எல்லை நிர்ணயம் செய்து, உடனடியாக மாகாண சபை தேர்தலை நடாத்துவது என்பது சாத்தியமான விடயம் அல்ல. இதனால் மேலும் சில வருடங்களுக்கு இந்த தேர்தலை பிற்போட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

பழைய முறையில் விகிதாசார முறையில் மாகாணசபை தேர்தல் இடம்பெற வேண்டும் என ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசு மனதார விரும்பியிருந்தால் இந்த தெரிவுக்குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே சமர்பித்த தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றில் சமர்பித்து அதனை அறுதிப்பெரும் பான்மையுடன் நிறைவேற்றி இருக்க முடியும்.

ஆனால் திசைகாட்டி அரசாங்கம் மாகாணசபை தேர்தலை உடனே நடத்துவதற்கு விரும்பாத காரணத்தால் தெரிவுக்குழு என்ற பந்தை விளையாட வைத்துள்ளனர். தெரிவுக்குழுவில் எதிர்கட்சி சார்பானவர்கள் பழைய முறையில் உடனே தேர்தலை நடத்துமாறு பரிந்து ரைப்பர். ஆளும் தரப்பு உறுப்பினர்கள் இல்லை 2017ல் நிறைவேற்றிய திருத்தம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என வாதிடுவர் தெரிவுக்குழுவில் ஆட்டம் முடிந்து முடிவு வரும் வரை மூன்று மாதம் காலம் கடக்கும, அறிக்கை வந்தபின்னர் மாகாணசபை தேர்தல் பற்றிய







## ரஷ்ய எண்ணைக் ... தொடர்ச்சி...

பணியாளர்கள் பெரும்பாலும் உக்ரேனியர்கள்ர்: 20 பேர் உக்ரைன் குடிமக்கள், ஆறு பேர் ஜார்ஜியாவைச் சேர்ந்தவர்கள்இ இரண்டு பேர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள். “டிசம்பர் 24, 2025 அன்று, மரினேரா ரஷ்யா கொடியை பறக்கவிடுவதற்கான தற்காலிக அனுமதியைப் பெற்றது, இது ரஷ்யா மற்றும் சர்வதேச சட்டத்தின்படி வழங்கப்பட்டதுஇ” மேலும் கப்பல் மீதான தாக்குதல் சர்வதேச நீரில் வழிசெலுத்தல் சுதந்திரத்தை உறுதி செய்யும் ஐ.நா. கடல் சட்டம் தொடர்பான மாநாட்டை மீறுவதாகும் என்று ரஷ்யா போக்குவரத்து அமைச்சகம் இது தொடர்பில் தெரிவித்துள்ளது.

## இன அழிப்புக்கான ... தொடர்ச்சி...

மேலும் வளர்த்தெடுத்து, இன அழிப்புக்கான நீதியும், ஈழத்தமிழர்களுக்கானஅரசியல் தீர்வும் ஒரே பாதையில் முன்நகரும் வகையில் அனைவரும் செயல்பட வேண்டும் என்பதே என் நிலைப்பாடு.

## செச்சென் தலைவரை ... தொடர்ச்சி...

பார்த்து அதைப் பற்றி யோசிப்பார்” என்றும் கூறியுள்ளார்.

மேற்கத்திய ஆதரவாளர்கள் ரஷ்யா மீது அதிக “அழுத்தம்” கொடுக்க வேண்டும், அது உக்ரைன் மோதலை முடிவுக்குக் கொண்டுவர உதவும். வெனிசுலாவுக்கு எதிரான டிரம்பின் நடவடிக்கையையும், அந்நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவைக் கடத்தியதையும் ஜெலென்ஸ்கி பாராட்டினார்.

பேச்சுவார்த்தை செயல்முறையை ஒழுங்குபடுத்து வதற்குப் பதிலாக ஜெலென்ஸ்கியை சீர்குலைக்க முயற்சிப்பதாக இதற்கு பதில் அளிக்கும்போது செச்சென் தலைவர் விரைவாக தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அமெரிக்கர்களின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொள்வதற்குப் பதிலாக உக்ரைனை நடவடிக்கை எடுக்கு மாறு அவரை வலியுறுத்தினார்.

“அந்தக் கோமாளி அமெரிக்க அதிகாரிகள் என் னைக் கடத்துவதாகக் கூறுகிறார். ஒரு ஆண் செய்வது போல, அதை தானே செய்வேன் என்று மிரட்டவும் இல்லை. அந்த எண்ணத்தை அவர் மனதில் கொள்ள முயற்சிக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று கதிரோவ் தனது டெலிகிராம் சேனலில் எழுதி யுள்ளார்.

அமெரிக்கா வார இறுதியில் வெனிசுலா மீது திடீர் தாக்குதலைத் தொடங்கியது, தலைநகர் கராகஸில் குண்டுவீசி, மதுரோவையும் அவரது மனைவியையும் கடத்தியது. பின்னர் அந்த ஜோடி போதைப்பொருள் கடத்தல் உட்பட பல்வேறு குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள நியூயார்க்கிற்கு மாற்றப்பட்டது. மதுரோ அனைத்து குற்றச்சாட்டுகளையும் கடுமையாக மறுத்து, தன்னை ஒரு “போர்க் கைதி” என்று விவரித்துள்ளார்.

## அனைத்துலக அமைப்பு... தொடர்ச்சி...

டிரம்ப் அறிவித்துள்ளார். நிர்வாக ஆணை 14199 இன்படி கூடுதல் சர்வதேச அமைப்புகளின் மதிப்பாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

டிரம்ப் நிர்வாகம் இந்த நிறுவனங்கள் அவற் றின் நோக்கத்தில் தேவையற்றவை, தவறாக நிர்வகிக் கப்பட்டவை, தேவையற்றவை, வீணானவை, மோசமாக நடத்தப்படுகின்றன, நமது சொந்த நலனுக்கு மாறாக தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுக்கும் நாடுகளால் கைப்பற்றப்பட்டுள்ளன, அல்லது நமது நாட்டின் இறையாண்மை, சுதந்திரங்கள் மற்றும் பொது செழிப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளது. இந்த நிறுவனங்களுக்கு அமெரிக்க மக்களின் இரத்தம், வியர்வை மற்றும் நிதியை அனுப்பு வது இனி ஏற்றுக்கொள்ள முடியாதது, அதற்காக எதுவும் காட்டப்படாமல். பில்லியன் கணக்கான டாலர்கள் வரி செலுத்துவோர் பணம் நமது மக்களின் இழப்பில் வெளி நாட்டு நலன்களுக்கு பாயும் நாட்கள் முடிந்துவிட்டன என டிரம்ப் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தில் இலங்கையில் அமெரிக்காவின் நிதியில் இயங்கும் கொழும்பு திட்டம் என்ற அமைப்பும் உள்ளடங்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 16 ஆம் திகதி... தொடர்ச்சி...

தொடர்ச்சியான முயற்சிகளுக்காக அமைச்சர் விஜித ஹேரத் தனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரி வித்துக் கொண்டார்.

இந்நிலையில் பாதுகாப்பு செயலாளரையும் அவர் நேற்று முன் தினம் பிரியாவிடை நிமித்தம் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துள்ளார்.

## தொல்பொருள் சின்ன ... தொடர்ச்சி...

திணைக்களங்கள் தமிழர்களுடைய அடையாளங்களை இலக்கு வைத்து அபகரிப்பு வேலைகளையே கடந்த சில ஆண்டுகளாக செய்து வருகின்றன.

குறிப்பாக 2009ம் ஆண்டுக்குப் பின்னர் மிகப் பெரியளவான நிலப்பரப்பை வடக்கு கிழக்கில் மிக மோசமாக இந்த திணைக்களங்களின் ஊடாகத்தான் அபகரித்துக் கொண்டிருக்கின்றார்கள். தொல்லியல் திணைக்களம் தொல்லியல் வேலைகளை பார்க்காது பௌத்த மதத்தை திணிக்கும் வேலையைதான் செய்து கொண்டு வருகின்றது.

அந்தவகையில் குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு, பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆக்கிரமிப்பு, வெடுக்கநாறிமலை ஆக்கிரமிப்பு இவ்வாறு அடுக்கி கொண்டே போகலாம்.

அவ்வாறே வவுனியா மாவட்டத்தில் சமளங்குளம் எனும் இடத்தில் அபகரிப்பு இடம்பெறுகின்றது. ஓரள விற்காவது தமிழர் தாயக பூமி என்பது உங்களுக்கு புரிய வில்லையா? வடக்கு கிழக்கெங்கும் இவ்வாறு ஒவ்வொரு இடமாக அபகரித்துக் கொண்டு இருக்கும் நிலைமைகள் தான் காணப்படுகின்றது.

தமிழர்கள் ஆரம்பித்திலிருந்து வாழ்ந்தார்கள் என்று கூறிக்கொண்டிருக்கும் நிலையில் பௌத்த மதம் சார்ந்தே தொல்லியல் திணைக்களத்திற்கு தெரிகின்றது. தமிழர்கள் சார்ந்து தெரியவில்லையா? இவ்வாறான இனவாத போக்கில் திணைக்களங்கள் இருந்தால் இணக் கப்பாடு என்பது இல்லாமலே போகும் என்றார்.

குறித்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் கூறுகையில் வன்னி தேர்தல் தொகுதிக்கு பொறுப்பாகவுள்ள தொல் பொருள் பணிப்பாளர் கலாநிதி பிரியந்த ஜெயசிங்க அவர்களிடம் கதைத்த போது 2016 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த தொல்பொருள் பணிப்பாளர் கூறியது போன்றே எண்கோண வடிவில் உள்ள உருவத்திற்கு மேல் 3 அடி உயரத்திற்கு வளைவு அமைப்பாக கட்டுவதாகவே கூறியதுடன் நடுவே மண் இருப்பதனால் அதற்குள்ளே தண்ணீர் சென்று கட்டிடத்தை சிதைவடையாது செய் வதற்காகவே பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்வதாக கூறுகின்றார்.

எதிர்வரும் காலங்களில் என்ன நடைபெறும் என்பது தெரியவில்லை. ஆனால் தற்போது அவ்விடத்தில் பௌத்த விகாரை கட்டுவதென்பது இல்லை என்றே நான் கருதுகிறேன். அவ்விடத்தில் தொல்பொருள் சின்னத்தை பாதுகாக்கும் வேலையே நடைபெற்று வருகின்றது.

எதிர்காலத்தில் என்னவாக மாறும் என்பது எனக்கு தெரியாது. விகாரைகளாக கட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. தொல்பொருள் என்றால் இருக்கிறதை பாதுகாக்கிறதே தவிர புதிதாக கட்டுவதல்ல.

பௌத்த சின்னம் இருக்கும் இடத்தில் விகாரை கட்ட வேண்டுமாக இருந்தால் பொலநறுவையிலும் இந்து சின்னங்கள் இருக்கின்றது. சோழர் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டு அழிவடைந்த நிலையில் இந்து கோயில்கள் இருக்கின்றது. அவ்வாறாயின் இந்து ஆலயங்களையும் புனரமைத்து பாதுகாக்க வேண்டும். அவ்வாறு இருக்கையில் பௌத்த விகாரை கட்டுவதற்கு இங்கு இடமளிக்க முடியாது.

வவுனியாவில் பிறந்து வளர்ந்த முன்னோர்கள் கூறும் விடயம் என்னவெனில் சமணன் குளம் என்ற பெயர் மருவி சமளங்குளம் என பெயர் மாற்றமடைந்திருந்ததாகவும், பௌத்த சமயம் உருவாக்கப்பட்ட பிற்பாடு சமண சமயம் வந்திருந்தது. அந்த சமணர்கள் 2 ம் நூற்றாண்டில் இருந்து 5 ம் நூற்றாண்டு வரை இந்தியாவில் பல இடங்களில் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அவர்கள் இலங்கைக்கும் வந்து சென்றிருந்தார்கள். அந்த சமயத்தில் சமண சமயம் பரப்பப் பட்டதாகவும் கூறப்படுகின்றது.

சதுர வடிவிலுள்ளது பழைய இந்து ஆலயம் எனவும் இந்து ஆலயத்தை அழித்து அவ்விடத்தில் சமண வழிபாட்டுதலம் கட்டப்பட்டதாகவும் , தமிழர்களுக்கான வழிபாட்டு தலம் அவ்விடத்தில் இருந்ததாகவும் சமணர்களு டைய ஆதிக்கம் இல்லாது போன பிற்பாடு அழிவடைந் ததாகவும் அதுமட்டுமின்றி அருகேயுள்ள கிராமமான எல்லப்பர் மருதங்குளத்தில் எண்கோண வடிவத்திலான பழைய சிவலிங்கம் ஒன்று தற்போது கோவிலாக உள்ள தாகவும் கூறப்படுகின்றது. அது இவ்விடத்தில் முதல் ஆலயம் அழிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த சிவலிங் கம் என முன்னோர்களால் கூறப்படுகின்றது. இவை ஆராய்ச்சிக்குட் படுத்தப்பட வேண்டிய ஒரு விடயம். தொல்பொருள் சின்னம் அனைத்தும் பௌத்த சின்னம் என்ற அரசாங்கத்தின் கெடுபிடி தான் இப்போதுள்ள பிரச்சினை என தெரிவித்தார்.

இவ்வாறு தமிழர் பூர்வீக நிலங்களையும், தமிழ் மக்களின் அடையாளங்களையும் அழித்து பௌத்த அடையாளங்களை நிலை நிறுத்தி பௌத்த வளர்ச்சிக்கு துணைபோவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஆகவே தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்தால் மட்டுமே தமிழ் மக்களது நிலங்களையும் அடை யாளங்களையும் பாதுகாத்து இருப்பினை தக்கவைத்து கொள்ளமுடியும்.

• • •

## வெனிசுலா - ஐ.நா. ... தொடர்ச்சி...

திபதி டிரம்ப் நேரடி அச்சுறுத்தல்களை விடுத்துள்ளார்.

நிக்கோலஸ் மதுரோ மீதான நடவடிக்கை குறித்து ஆராய கவுன்சில் உறுப்பினர்கள் அழைக்கப் படவில்லை. சமீபத்திய அமெரிக்க தாக்குதல் மற்றும் தொடர்ச்சியான கடற்படை தனிமைப்படுத்தல் அந்த நாட்டின் சுதந்திரத்திற்காகவா அல்லது அதனை அடி பணிய வைப்பதற்காகவா என்பதை மதிப்பிட அவர்கள் அழைக் கப்படவில்லை.

கவுன்சில் உறுப்பினர்கள் சர்வதேச சட்டத்தை யும் குறிப்பாக ஐநா. சாசனத்தையும் பாதுகாக்க அழைக் கப்படுகிறார்கள். நீங்கள் ஆறு செயல்களை உறுதிப் படுத்துங்கள். நாம் அணுசக்தி யுகத்தில் இருப்பதால், தோல்வி மீண்டும் நிகழ முடியாது. மனிதகுலம் அழிந்துவிடும். சாசனத்தின் கீழ் அதன் பொறுப்புகளை நிறைவேற்ற மூன் றாவது வாய்ப்பு இருக்காது.

பாதுகாப்பு கவுன்சில் உடனடியாக பின்வரும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும். – வெனிசுலா விற்கு எதிரான அனைத்து வெளிப் படையான மற்றும் மறைமுகமான அச்சுறுத்தல்கள் அல்லது படைபலத்தைப் பயன்படுத்துவதை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண் டும்.

- ஐநா. பாதுகாப்பு கவுன்சிலின் அங்கீகாரம் இல் லாத நிலையில் மேற்கொள்ளப்படும் அதன் கடற்படை தனிமைப்படுத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து கட்டாய இராணுவ நடவடிக்கைகளையும் அமெரிக்கா நிறுத்த வேண்டும்.

-அமெரிக்காஉடனடியாகவெனிசுலாவின்எல்லைக் குள் இருந்தும், அதன் எல்லைப் பகுதிகளிலிருந்தும் தனது இராணுவப் படைகளைத் திரும்பப் பெற வேண்டும், இதில் உளவுத்துறை, கடற்படை, வான்வழி மற்றும் வற்புறுத்தல் நோக்கங்களுக்காக நிலைநிறுத்தப்பட்ட பிற முன்னோக்கி நிறுத்தப்பட்ட சொத்துக்கள் அடங்கும்.

- வெனிசுலா ஐநா. சாசனத்தையும், மனித உரிமை கள் உலகளாவிய பிரகடனத்தில் பாதுகாக்கப்பட்ட மனித உரிமைகளையும் கடைப்பிடிக்கும்.

- பொதுச் செயலாளர், வெனிசுலா தொடர்புடைய மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஈடுபடுத்தவும், 14 நாட் களுக்குள் பாதுகாப்பு கவுன்சிலுக்கு அறிக்கை அளிக்கவும், சாசனத்துடன் நிலையான பரிந்துரைகளுடன் உடனடியாக ஒரு சிறப்புத் தூதரை நியமிக்க வேண்டும் என்றும், பாதுகாப்பு கவுன்சில் இந்த விஷயத்தில் அவசரமாக ஈடுபட வேண்டும் என்றும் நான் பரிந்துரைக்கிறேன்.

- அனைத்து உறுப்பு நாடுகளும் ஒருதலைப்பட்ச அச்சுறுத்தல்கள், வற்புறுத்தல் நடவடிக்கைகள் அல்லது ஐநா. பாதுகாப்பு கவுன்சிலின் அதிகாரத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஆயுதமேந்திய நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

பொறுப்பற்ற தன்மையுடன், முடிவில், திரு. ஜனாதிபதி மற்றும் கவுன்சிலின் மதிப்புமிக்க உறுப்பினர்கள், அமைதி மற்றும் மனிதகுலத்தின் உயிர்வாழ்வு ஆகி யவை ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் சர்வதேச சட்டத்தின் உயிருள்ள கருவியாக இருக்கிறதா அல்லது பொருத்தமற்றதாக மாற அனுமதிக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தது. அதுதான் இன்று இந்த கவுன்சிலின் முன் உள்ள தேர்வு.

## மலையகக் கல்விப் ... தொடர்ச்சி...

வேண்டும். தியாகிகள் வாரம் என்பது வெறும் நினைவேந்தல் வாரம் மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் அரசியல் பலத்தைக் காட்டும் வாரமாகவும் மாற வேண்டும். அனைத்து மலையக அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் தியாகிகள் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். மலையகத் தியாகிகள் சிந்திய இரத்தம் வீண்போகக் கூடாது. அவர்கள் ஏற்றி வைத்த போராட்டத் தீப்பந்தம், இன்றும் லயன் குடியிருப்புகளில் வறுமையிலும் அறியாமையிலும் வாடும் மக்களின் வாழ்வை ஒளிரச் செய்ய வேண்டும். 1940இல் கோவிந்தன் ஆரம்பித்த அந்தப் பயணம், ஒரு கௌரவமான சமூகமாக மலையக மக்கள் தலைநிமிரும் வரை தொடர வேண்டும்.

வரலாற்றை மறந்தால் வழிதவறிப் போவோம். ஆகவே, இந்தத் தியாகிகள் வாரத்தில் நம் முன்னோர்களின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவோம். அவர்களின் கனவான "உரிமையுள்ள வாழ்வை" வென்றெடுக்க உறுதி பூண வேண்டும்.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்





